Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது சித்திரை 13ஆம் நாள் துல்கஃதா 20 (26-4-62) வியாழக்கிழமை இதழ் 74

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

## இரண்டு வருடத்துக்கு இலவச சேவை

### கல்வி அதிபருக்கு வர்த்தக கலைமன்றம் கடிதம்

யாழ்ப்பாணம், வியாழன்

இரண்டு வருடகாலத்திற்கு இலவசமாக வர்த்தக ஆசிரியர்களாகக்கடமையாற்ற தாங்கள் முன்வருவதாகவும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருவதாகவும், அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றம் கல்வி டைரக்டருக்கு அறிவித்துள்ளது.

வடமாகாணத்தில் 80 வர்த்தக ஆசிரியர்களுக்கு பாடசாலைகளில் இடமிருப்பதாகவும் இந் நியமனங்களைச் செய்து தருமாறும் இம்மன்றம் அண்மையில் கல்வி இலாகாவைக் கேட்டிருந்தது. இந் நியமனங்களுக்குத் திறைசேரியில் பணமில்லாதபடியால் இரண்டு வருடகாலத்திற்கு இந்த நியமனங்களைச் செய்யமுடியாதென அண்மையில் கல்வி அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்து எழுதிய இம்மன்றம் இரண்டுவருடகாலத்திற்கு சம்பளம் எதுவுமின்றி இலவசமாகக் கடமையாற்றக்கூடிய வர்த்தக ஆசிரியர்களைத் தந்துதவத் தயாராக இருப்பதாகவும் மாணவர்கள் வர்த்தகக் கல்வியைப் பெறும் வகையில் இந் நியமனங்களைச் செய்துதவுமாறும் அறிவித்துள்ளது.

## யாழ்ப்பாணம் தொழில் நுட்ப கல்லூரி

### வகுப்பு விரைவில் ஆரம்பமாகும்.

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி வகுப்புகள் ஒருவருட காலத்திற்குப்பின் மீண்டும் கொக்குவிலிலுள்ள அதன் சொந்தக்கட்டிடத்தில் ஆரம்பமாகவிருப்பதாகத் தெரிகிறது. அடுத்த தவணை ஆரம்பத்தில் இவ்வகுப்புகள் இக்கட்டிடத்தில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகத் தெரிகிறது.

கடந்த ஒருவருட காலமாக இராணுவத்தினரின் பெரிய முகாமாக இக்கட்டிடம் உபயோகிக்கப்பட்டு வந்தமையால் இங்கிருந்த வகுப்புகள் கோப்பாய் மத்திய மகாவித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டதும் இதனை எதிர்த்து இடையில் மாணவர்கள் பகிஷ்காரம் செய்துவந்ததும் தெரிந்ததே.

இப்பொழுது இராணுவத்தினர் இங்கிருந்து வாபஸ் பெற்றுக்கொண்டதைத் தொடர்ந்து கொக்குவிலிலுள்ள கனிஷ்ட தொழில் நுட்பக்கல்லூரிக் கட்டிடத்திற்கு உபகரணங்கள் மாற்றப்பட்டுவருகிறதாகத் தெரிகிறது. அடுத்த தவணை ஆரம்பத்தில் இவ்வகுப்புகள் இங்கு நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

## கிருஷ்ணா-கோதாவரி கமிஷன் அறிக்கை

புதுடில்லி, ஏப்ரல் 25

கிருஷ்ணா, கோதாவரி நதித் தண்ணீர் தகராறு சம்பந்தமாக நியமிக்கப்பட்ட கமிஷன் தனது அறிக்கையை ஜுலை மாதத்தில் சமர்ப்பிக்குமென எதிர்பார்க்கப்படுவதாக நீர்ப்பாசன மந்திரி இன்று தெரிவித்தார்.

## யாழ்ப்பாணத்தில் மே தின விழா

### எட்மண்ட் சமரக்கொடி கலந்துகொள்வார்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் மே தின விழாவில் சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த புலத்சிங்கள எம். பி. திரு. எட்மண்ட் சமரக்கொடி கலந்துகொள்ளவிருக்கிறார்.

திரு. எட்மண்ட் சமரக்கொடி விழாவில் கலந்துகொள்வதற்காக மே முதலாம் திகதி காலை இங்கு வருவாரெனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## "ஆக்கிரமிப்புக்கு காஷ்மீர் தளமாக இருக்க முடியாது"

### இந்தியா எச்சரிக்கை

புதுடில்லி, ஏப்ரல் 25

"எவ்வளவுதான் பொறுமையும் சகிப்புத்தன்மையும் இருந்தாலும், இந்தியாவில் மேலும் ஆக்கிரமிப்புச் செய்வதற்கு காஷ்மீரை ஒரு நிலைக்களமாக பாகிஸ்தான் உபயோகித்துக்கொள்வதற்கு இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது" என்று இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார இலாகா புத்தக வடிவில் காஷ்மீர் பிரச்னைபற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் காஷ்மீர் பற்றி ஐ. நா. பாதுகாப்புச் சபை முன்பு செய்த தீர்மானங்கள்பற்றிக் குறிப்பிட்டிருப்பதுடன் இத்தீர்மானங்களை பாகிஸ்தான் அனுசரித்து நடக்கவில்லையென்றும் தெரிவித்துள்ளது. பாதுகாப்புச் சபைத் தீர்மானங்களை பாகிஸ்தான் மீறி நடந்துள்ளதாக அந்த அறிக்கை குற்றஞ்சாட்டியுள்ளது. காஷ்மீரிலிருந்து பாகிஸ்தான் தனது படைகளை, பாதுகாப்புச் சபைத் தீர்மானத்தின்படி வாபஸ்பெறவில்லையென்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

"காஷ்மீரில் மூன்றில் ஒரு பகுதியைப் பிடித்துவைத்துக் கொண்டுள்ள பாகிஸ்தான் 1947-ம் ஆண்டு தொடக்கம் வாக்கெடுப்போ தேர்தலோ நடத்தாமலிருந்துகொண்டு காஷ்மீரில் வாக்குக்கணிப்பு நடத்தும்படிகேட்பதற்கு உரிமை கிடையாது" என்று அந்த அறிக்கை கூறுகிறது.

## பாக். தண்டனையை ஆட்சேபித்து

### பட்டாச்சாரியா அப்பீல் செய்வார்

புதுடில்லி, ஏப், 25

பாகிஸ்தானுக்குக் கடத்திச் செல்லப்பட்ட கர்னல் பட்டாச்சாரியாவுக்கு அந்நாட்டு இராணுவ கோர்ட் விதித்திருந்த சிறைத் தண்டனையை ஆட்சேபித்து கர்னல் பட்டாச்சாரியா அப்பீல் செய்துகொள்ளப் போவதாக பிரதமர் நேரு நேற்று லோகசபையில் தெரிவித்தார்.

மற்றும் சில கேள்விகளுக்கு நேரு பின்வருமாறு பதில் கூறினார்:-

"ராணுவ ஆட்சியில் எத்தகைய அப்பீல் செய்துகொள்ள முடியுமென்று தெரியவில்லை. ஆனால் கர்னல் பட்டாச்சாரியா அப்பீல் மனுவைத் தயாரித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது."

## பாசனத் திட்டத்தை ஆராய நிபுணர் குழு

புதுடில்லி, ஏப்ரல் 25

இந்தியாவின் பாசனத் திட்டங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நிபுணர் குழுவொன்று நியமிக்கப்படவிருப்பதாக நீர்ப்பாசன மந்திரி தெரிவித்தார்.

## ரஷ்ய அரசியல் அமைப்புத் திட்டம்

### புதிதாக உருவாக்க கமிட்டி நியமனம்

மாஸ்கோ, ஏப். 25

ஜோசப் ஸ்டாலின் அதிகாரத்திலிருந்தபோது 1936-ம் ஆண்டில் அமைக்கப்பட்ட சோவியத் யூனியனின் அரசியலமைப்புத் திட்டத்தை மாற்றி புதிய அரசியலமைப்புத் திட்டமொன்றை உருவாக்குவதற்கு சோவியத் தலைமைப பீடம் அங்கீகாரமளித்துள்ளது. புதிய அரசியற் திட்டத்தை உருவாக்குவதற்கு பிரதமர் குருஷ்சேவின் தலைமையில் 97பேர் கொண்ட கமிட்டிஒன்று நிறுவப்பட்டுள்ளது.

## ஜப்பான் ஆட்சேபம்

டோக்கியோ, ஏப். 25

அணுஆயுத சோதனையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளதற்கு ஜப்பான் அரசாங்கம் அமெரிக்காவுக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளது. டோக்கியோவிலுள்ள அமெரிக்க பிரதிநிதியிடம் ஜப்பான் வெளிவிவகார மந்திரி ஆட்சேபக் குறிப்பைக்கொடுத்தார்.

## ராஜன்பாபு எழுத்தில் புகுவார்

புதுடில்லி, ஏப்ரல் 25

ராஷ்டிரபதி பதவியிலிருந்து ஓய்வுபெற்றபின் தமது உடல்நிலை இடம் கொடுத்தால் தமது நேரத்தில் சிலபகுதியை எழுதுவதில் செலவிடுவதற்கு உத்தேசித்திருப்பதாக டாக்டர் ராஜேந்திரபிரசாத் இன்று எழுத்தாளர் கோஷ்டியொன்றிடம் தெரிவித்தார்.

## குருஷ்சேவின் புதிய மந்திரி சபை

மாஸ்கோ, ஏப்ரல் 25

சோவியத் யூனியனின் பிரதம மந்திரியாக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ள திரு. நிகிட்டா குருஷ்சேவ் தமது புதிய மந்திரிசபை அங்கத்தவர்களின் விபரத்தை இன்று அறிவித்தார்.

புதிய மந்திரி சபையிலும் திரு. மிக்கோயனே வெளிவிவகார மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார். மலினோவ்ஸ்கி பாதுகாப்பு மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## தேர்தலை எதிர்த்து மனுக்கள்

புதுடில்லி, ஏப். 25

அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் வெற்றிபெற்ற 12 சட்டசபை அபேட்சகர்களின் தேர்தல் செல்லாது என்றும் ஒரு பாராளுமன்ற அபேட்சகரின் வெற்றி செல்லாது என்றும் தமிழ்நாட்டிலிருந்து தேர்தல் குழுவிடம் மனுக்கள் அளிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ பெரும்புதூர், நிலக்கோட்டை, நாகர்கோவில், உப்பிலியாபுரம், வேலூர், காட்டுமன்னார் கோவில், திண்டிவனம், இராசிபுரம், செய்யாறு, தஞ்சாவூர், திருத்தணி, வெங்கலம ஆகிய 12 தொகுதிகளிலிருந்தும் தமிழ்நாட்டுச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்களின் தேர்தல் செல்லாது என்று மனுக்கள் அளிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ பெரும்புதூர் தொகுதி போட்டியிட்டு வெற்றிபெற்ற அமைச்சர் திரு. பக்தவத்சலத்தின் தேர்தல் செல்லாது என்று திராவிடமுன்னேற்றக் கழக அபேட்சகர் திரு. அண்ணா மலை எதிர்ப்பு மனு அளித்திருக்கிறார்.

## "கென்னடியை அழைப்பேன்"

மாஸ்கோ, ஏப்ரல் 25

கெடுபிடி யுத்த நிலைமை குறைந்து சூழ்நிலையில் ஓரளவு மாற்றமேற்பட்டதும் அமெரிக்க ஜனாதிபதி கென்னடியை உச்சி மகாநாட்டுக்கு அழைப்பதற்கு தாம் உத்தேசித்திருப்பதாக சோவியத் பிரதமர் குருஷ்சேவ் இன்று தெரிவித்தார்.

## அமெரிக்கா அணுகுண்டு வெடித்தது?

ஸ்டாக்ஹோம், ஏப். 25

சுவீடனிலுள்ள உப்சலாவான ஆராய்ச்சி நிலையத்தில் அணுகுண்டு வெடிப்பு ஒன்று பதிவாகியிருப்பதாக இன்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர். இதன் விபரங்களை விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர். பூமிக்குமேல் அணுஆயுத சோதனைகளை நடத்துவதற்கு அமெரிக்க ஜனாதிபதி திரு. கென்னடி, அமெரிக்க அணுசக்திக் கமிஷனுக்கு விடுத்த உத்தரவைத் தொடர்ந்து முதல் குண்டு பரீட்சிக்கப்பட்டிருக்கலாமென்றும் அதன் அதிர்ச்சிதான் இங்கு பதிவாகியிருக்கக் கூடுமென்றும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

சோவியத்யூனியனின் சமீபத்தில் அணு ஆயுத பரிசோதனைகளைப்பற்றி முதலில் தகவல் வெளியிட்டது உப்சலாவான ஆராய்ச்சி நிலையம்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

அணுஆயுத சோதனைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி கென்னடி உத்தரவுவிடுத்ததைத் தொடர்ந்து டோக்கியோவிலுள்ள அமெரிக்க ஸ்தானிகரின் காரியாலயத்தின் முன் மாணவர்கள் சிலர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிசார் கலைத்தனர்.

# நேரு டெஹ்ராடனில் 3 நாள் ஓய்வு பெறுவார்

புதுடில்லி, ஏப். 26

டெஹ்ராடனில் மூன்றுநாள் விடுமுறையைக் கழிப்பதற்காக பிரதமர் நேரு இன்று புதுடில்லியிலிருந்து புறப்பட்டார். அவருடன் அவரது சகோதரி திருமதி. விஜயலட்சுமி பண்டிட்டும் செல்கிறார்.

அமெரிக்கா தனது திட்டப்படி அணு ஆயுத சோதனையை ஆரம்பிக்கவிருப்பதுபற்றியும் அமெரிக்கா அணு ஆயுத சோதனையை ஆரம்பித்தால் ரஷ்யாவும் ஆரம்பிக்குமென்ற சோவியத்யூனியனின் எச்சரிக்கைபற்றியும் விமான நிலையத்தில் நிருபர்கள் பிரதமர் நேருவிடம் கேட்டதற்கு தாம் நேற்று லோகசபையில் தெரிவித்த கருத்தைத் தவிர புதிதாக எதுவும் சொல்வதற்கில்லையென்றார்.

அணு ஆயுத சோதனைகள் அழிவையே கொண்டுவருமென்றும், ஜெனிவா படைகுறைப்பு மகாநாடு முடிவடையும்வரையிலாவது அணுஆயுதசோதனைகளை அணுஆயுத வல்லரசுகள் நிறுத்திவைக்கவேண்டுமென்றும்பிரதமர் நேருநேற்று லோகசபையில் தெரிவித்திருந்தார்.

## பொலிஸார் பற்றி அக்குரணை எம். பி.

மாத்தறை, புதன்

"தங்களது உரிமைகளுக்காகப் போராடும் தோட்டத் தொழிலாளர்களுக்காகப் பொலிஸார் பாதுகாப்பளிக்காது, பணம் படைத்த தோட்டச் சொந்தக்காரர்கள் பக்கம் இருந்துகொண்டு ஏழைத் தொழிலாளர்களைத் தாக்குகிறார்கள்." என்று அக்குரஸ்ஸ வெல்பீட்ட தோட்டத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் அக்குரஸ்ஸ எம். பி. டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:

"பொலிஸாரின் நடத்தைகண்டு அவர்கள்மீது நான் குற்றம் சுமத்தமாட்டேன். காரணம் பொலிஸாருக்கு மேலிடத்திலிருந்து கட்டளை பிறக்கிறது. இந் நாட்டிலுள்ள மக்களுக்கு இராணுவம், பொலிஸ் ஆகியவற்றின் ஆட்சி தேவையில்லை. ஆனால் இங்குள்ள மக்கள், ஜனநாயக அரசாங்கத்தின் ஆட்சியையே விரும்புகிறார்கள். இந்த அரசாங்கமொன்றினால்தான் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யமுடியும்,"


## வரி விளம்பரம்

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50 தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப்பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

**வைத்தியர் பரிபூரணநந்தர்.**
கைலாயபிள்ளையார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

### தேவை

தேநீர் சாலைக்கு (Canteen) அனுபவமுள்ள விற்பனையாளர்கள் தேவை. பிணைப்பணம் ரூபா 500/- விண்ணப்பத்துடன் தராதரம் நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் மட்டும் அனுப்பவும்.

விண்ணப்பம் முடிவு திகதி **30-4-62.**

காரியதரிசி:
**கூட்டுறவு வைத்திய சாலை,**
**மூளாய், சுளிபுரம்.**


## இன்று உங்கள் பலன்

-சோதிடஆசான்செ.தெல்லியூர்-

சுபகிருது ஆண்டு சித்திரை திங்கள் 13-ம் நாள் வியாழக்கிழமை (26-4-62) ஹிஜ்ரி வருடம் 1381, துல்கஃதா 20-ம் பிறை.

இன்று பின்னிரவு 4-17 வரை ஸப்தமி. அதன்பின்னர் அட்டமி. பகல் 10-19வரை பூராடம். அதன்பின்னர் உத்தராடம். சித்தயோகம். இன்று சுபகருமங்களை கையாள்வதற்கு நல்லதினமாகும். இராகு காலம் 1-29 முதல் 2-59வரை.

கைவிசேடம்—இரவு 7-39 முதல் 9-37வரை. பிரபுதரிசனம்— இரவு 7-39 முதல் 9-37 வரை. பூமிப்பிரவேசம்—இரவு 7-39 முதல் 9-37 வரை. வயற்செய்கை—இரவு 3-01 முதல் 3-26 வரை. தானியநடுகை—இரவு 3-01 முதல் 3-26வரை. பிரயாணம்—இரவு 3-01 முதல் 3-26 வரை. புதிதுண்ணல்—இரவு 3-01 முதல் 3-26 வரை. விவாகம்—இரவு 3-01 முதல் 3-26 வரை. வீடு வேய்தல் முதலியன—பகல் 10-45 முதல் 4-00 வரை.

அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்தராடம் ஆகிய நட்சத்திரங்களுக்கு இன்று படுபட்சி நாளாகையால் இவர்கள் சுபகருமங்களை மேற்கொள்ளலாகாது.

### இராசிப்பலன்

பூராடம்—உத்தராடம்:- இவர்களுக்கு குடும்ப நிம்மதி தொழிலுற்சாகம், கலைப்பயிற்சி, ஊழியரால் கஷ்டம் ஆகியன காணப்படுகின்றன.

மேடம்: (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்முடிய)

இவர்களுக்கு பணமுடை, வழக்குவிவகாரம், கவலை பொருள் கொள்வனவில் செலவதிகம், தேகநலக்குறைவு ஆகியன காணப்படுகின்றன

இடபம்: (கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை முடிய) இவர்களுக்கு செய்காரியதடை, பழைய கடன்வரவு, விவ்காரத்தில் வெற்றி, பிரயாண சுகம், ஊக்கம் முதலிய காணப்படுகின்றன.

மிதுனம்: (மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம், முன்முக்கால் முடிய) இவர்களுக்கு பிரயாணக் கஷ்டம், நண்பரால் தொல்லை, வீண்பகை, தொழிற் சிறப்புக்கு பெரியோர் உதவி ஆகியன காணப்படுகின்றன.

கடகம்:(புனர்பூசம் 4ம்பாதம், பூசம், ஆயிலியம் முடிய) இவர்களுக்கு குடும்ப நிம்மதியீனம், எதிரிகளால் இடர், நாளின் பின்பகுதி குடும்பசுகம், தொழில்நலம், பிள்ளைகளால் உதவி ஆகியன உண்டு.

சிங்கம்: (மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம் முடிய) இவர்களுக்கு பிரயாணகஷ்டம், செய்காரியத்தடை, நல்லோர் நட்பால் முயற்சிபலிதம், பணவரவில் தடை, தொழில் ஊழியர் தொல்லை ஆகியன உண்டு.

**கன்னி:** (உத்தரம் பின்முக்கால், அத்தம், சித்தரை முடிய) இவர்களுக்கு குடும்ப சந்தோஷம், ஒற்றுமை, பெண்கள் தொடர்பு, குடும்பத்தில் நிம்மதி, பணவரவு, சந்தோஷம் ஆகியன உண்டு.

துலாம்: (சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முன்முக்கால் முடிய) இவர்களுக்கு போசனசுகம், மதிப்புயர்ச்சி, பணமுடை, தொழில் கஷ்டம், ஊழியர் இடர் விளைத்தல், மாதுருவழி உதவிகிடைத்தல் ஆகியன உண்டு.

விருச்சிகம்: (விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை முடிய) இவர்களுக்கு தேகநல விருத்தி, குடும்பத்தால் கவலை, பெண்களால் தொல்லை, நல்லோர் தொடர்பால் வாழ்க்கையில் நிம்மதி, பிறதொழில்சுகம் ஆகியன உண்டு.

தனு: (மூலம், பூராடம்,உத்தராடம் 1ம்பாதம்முடிய) இவர்களுக்கு பணமுடை, ஞாபகமறதி, வித்தைநட்டம், ஊழியர் தொல்லை, தொழில்மந்தம், பிற்பொழுதில் உற்சாகம், நிம்மதி ஆகியன உண்டு.

மகரம்: (உத்தராடம் பின்முக்கால், திருவோணம், அவிட்டம் முன்னரை முடிய) இவர்களுக்கு வண்டி வாகன லாபம், கீர்த்தி, பணவரவு, நல்லோர் நட்பு, தொழில் வெற்றி, உழைப்புக்கு மதிப்பு, சுகம் ஆகியன காணப்படுகின்றன.

கும்பம்: (அவிட்டம் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால் முடிய) இவர்களுக்கு கஷ்டநிலை, குடும்ப நிம்மதியீனம், சஞ்சலகுணம், பிற்பாதியில் நல்லோர் நட்பு, தொழில்விருத்தி, பணவரவு, ஆகியன உண்டு.

மீனம்: (பூரட்டாதி4ம்பாதம், உத்திரட்டாதி, ரேவதி முடிய) இவர்களுக்கு நல்லவர் நட்பால் முயற்சி வெற்றி, மதிப்புயர்ச்சி, பணவரவு, தார்மீக செலவு, சுப பொழுதுபோக்கு, சந்தோஷம் ஆகியன காணப்படுகின்றன.

## பொலிஸ்காரர் தற்கொலை

### மதுப்பிரியர் என மனைவி சாட்சியம்

குருநாக்கல், புதன்

குருநாக்கலைச் சேர்ந்த 36 வயதுள்ள பொலிஸ் கான்ஸ்டபிள் சின்னத்தம்பி செல்லத்துரை என்பவர் நச்சுத் திராவகம் உட்கொண்டு தற்கொலை செய்துகொண்டார். மதுப்பிரியரான செல்லத்துரையை, மது அருந்த வேண்டாமென்று அவரது மனைவி எச்சரிக்கை செய்ததைத் தொடர்ந்தே அவர் தற்கொலை செய்தார் எனக் கூறப்படுகிறது.

இறந்தவரின் மரண விசாரணையின் போது, இறந்தவர் விதவை ஏ. வேதவனம் (30 வயது) தெரிவிக்கையில், 1954-ம் ஆண்டு தாங்கள் விவாகம் செய்துகொண்டதாகவும் இரண்டு குழந்தைகள் உண்டென்றும், தாம் எட்டு மாதக் கர்ப்பிணியென்றும் கூறினார்.

இறந்தவரின் மனைவி மேலும் தெரிவித்ததாவது: நண்பகல் சாப்பாடு சாப்பிடுவதற்கு எனது கணவர் வீட்டுக்கு வந்த சமயம், நான் பிரசவத்துக்கு எனது கிராமத்துக்குச் செல்லும்பொழுது எனது மகளையும் அழைத்துக்கொண்டு போகப்போவதாகக் கூறினேன். அதைத் தொடர்ந்தே எங்களுக்கிடையே தர்க்கம் ஆரம்பித்தது. என்னைத் தாக்கினார்.

சிறிது நேரத்தில், எனது மகன் என்னிடம் வந்து அவர் எதையோ அருந்தினாரென்றும் கீழே விழுந்துவிட்டாரென்றும் கூறினான். நான் அங்கு போய் பார்த்த சமயம், எனது கணவர் மயக்கமான நிலையில் இருந்தார்."

மரண விசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ஜோர்ஜ் ஜயசிங்கா தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## வட பகுதி அசைஸ் நீதி மன்றம்

### இப்பருவ விசாரணைகள் முடிவு

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தின் இப் பருவத்திற்கான வழக்கு விசாரணைகள் முடிவடைந்தன. வருகிற வெள்ளிக்கிமை இதற்கான உத்தியோக பூர்வமான சடங்குகளுடன் மூடி வைக்கப்படும்.





நாம் யாவரும் நன்றாய் சாப்பிடுகிறோம். அதிக சக்தியும் பெலனும் உள்ளவர்களாய்இருக்கிறோம். பலத்திற்கும் வீர்யத்திற்கும் உங்கள் தினசரி ஆகாரத்தில் ஒரு பாகமாக நீங்கள் மாமைட்டை தினசரி அருந்தி வரவேண்டும்.

மாமைட் வெந்நீரில் அருந்தப்படலாம். உங்களுக்கு விருப்பமானால் கொஞ்சம் எலுமிச்சம் பழச்சாறும் சேர்த்து அல்லது தாளித்துச் சாப்பிடலாம். மாமைட்டை ரொட்டியிலோ அல்லது பிஸ்கட்டிலோ பட்டரோடு அல்லது பட்டரின்றி இலேசாகத் தடவி சாப்பிடலாம். மாமைட்டை சுப் கறி முதலியவற்றில் சேர்க்கும் போழுது அதிகக்டியானருசியை மட்டுமின்றி உங்கள் தினசரி ஆகாரத்தைச் சமைக்கும் பொழுது தேவையான விட்டமின் பி சத்துக்களையும் கூட்டிக் கொள்கிறீர்கள்.

மாமைட் பி வர்க்க விட்டமின்களை ஏராளமாகக் கொண்ட ஓர் காய்கறி ஆகாரம்.




# மாமைட்

# அமெரிக்க அணு ஆயுத சோதனை: குரோமிக்கோ எச்சரிக்கை

வாஷிங்டன், ஏப். 25

பூமிக்கு மேல் அணு ஆயுத சோதனையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான தனது திட்டத்தின்படி அமெரிக்க அணுசக்திக் கமிஷன் சகல ஏற்பாடுகளையும் தயாரித்து முடித்துவிட்டது.

காலநிலை சரியாகவிருந்தால் இன்னும் சிலமணி நேரங்களில் முதலாவது அணுஆயுதப் பரீட்சை செய்யப்படும் என்று அணுசக்திக் கமிஷன் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## குரோமிக்கோ எச்சரிக்கை

அமெரிக்கா நடத்தும் ஒவ்வொரு அணு ஆயுதப் பரீட்சையையும் தொடர்ந்து ரஷ்யாவும் ஒவ்வொரு அணு ஆயுதப் பரீட்சையை நடத்தும் என்று சோவியத் வெளிவிவகார மந்திரி திரு. குரோமிக்கோ நேற்று எச்சரித்தார்.

# உலக கம்யூனிஸ்டுகள் தொகை 4 கோடி பேர்!

வாஷிங்டன், ஏப் 52

உலகம் முழுவதிலும் கம்யூனிஸ்ட் கட்சியில் 4 கோடி மெம்பர்கள் இருப்பதாகவும், இவர்களில் 3.6 கோடி பேர் கம்யூனிஸ்ட் நாடுகன்ல் இருப்பதாகவும் அரசாங்கம் மதிப்பீடு கூறுகிறது.

சோவியத் முகாமுக்கு வெளியே இந்தோனேஷியாவில்தான் கம்யூனிஸ்ட் கட்சி மெம்பர்கள் அதாவது 17,50,000 கம்யூனிஸ்டுகளிலிருக்கின்றனர். இத்தாலியில் 12,00,05-த்திலிருந்து 15,00,000 பேர்வரை கம்யூனிஸ்ட் கட்சியில் மெம்பர்களாயிருக்கின்றனர்.

பிரிட்டனில் 28,000-த்திலிருந்து 29,000 பேர்வரை கம்யூனிஸ்ட் கட்சியில் மெம்பர்களாயிருக்கின்றனர்.

உலகிலேயே தனிப்பெரும் கம்யூனிஸ்ட் கட்சி பீகிங் ஆட்சிதான். அதில் 70 லட்சம் மெம்பர்களிருக்கின்றனர்.

# “றேயல் கல்லூரியில் ஏழைகளுக்கும் இடம் கிடைத்திருகிறது”

—எம். பி.

பிபிலை, புதன்

‘தேசிய கல்வித்திட்டத்தினல் றோயல் கல்லூரியில் இப்போது ஏழைமாணவர்களுக்கும், இடம் கிடைத்திருக்கிறது. என்று பிபிலை எம். பி. திரு. டி. எம். குணசேகரா டம்பகல்ல வித்தியாலயத்தில் நடைபெற்ற பொருட்காட்சி வைபவத்தின் போது பேசுகையில் கூறினர்.

அவர் தொடந்து பேசுகையில் றோயல் கல்லூரியில் ஏழைமாணவர்களுக்கும் இடம் கொடுத்ததை விரும்பாத பலர், வேறுவிதமாக அரசாங்கத்தைக்குறை கூறுகின்றனர் என்று கூறினர்.

# இலங்கை-அமெரிக்க ரப்பர் வர்த்தகம்

## எதிர்காலம்பற்றி பேச்சுவார்த்தை

கொழும்பு, புதன்

இலங்கை—அமெரிக்க ரப்பர் வர்த்தகத்தின் எதிர்காலம்பற்றி அமெரிக்க அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடாத்துமாறு வாஷிங்டனிலுள்ள இலங்கைத் தூதராலயத்தை இலங்கை அரசாங்கம் கேட்டுள்ளது.

இவ்விஷயம்பற்றி அமெரிக்காவுடன் உடனடியாகவே பேச்சுவார்த்தைகளை நடாத்த வேண்டுமென இலங்கை அரசாங்கம் கருதுகிறது. அமெரிக்கா, தான் தேக்கி வைத்துள்ள ரப்பரையே தனது படைப்பல தேவைகளுக்குப் பாவிக்க உத்தேசிப்பதாக வாஷிங்டன் செய்தியொன்று எட்டியதன்பேரிலேயே இலங்கையரசாங்கம் அவசர பேச்சுவார்த்தைகள் நடாத்த உத்தேசிக்கின்றது.

வருடாந்தம் 20,000 தொன் ரப்பரை இலங்கை அமெரிக்காவுக்கு அனுப்பிவருகிறது. அமெரிக்கா இலங்கையின் பிரதம ரப்பர் இறக்குமதி நாடாகும்.

ரப்பர் கட்டுப்பாட்டதிகாரி திரு. பி. மகாதேவாவும் அமெரிக்க அரசாங்கத்துடன் இது விஷயம்பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடாத்துவார். ஜூன் மாதத்தில் வாஷிங்டனில் நடைபெறவிருக்கும் சர்வதேசமகாநாடொன்றில் கலந்துகொள்ளவிருக்கும் திரு. மகாதேவா, அச்சமயம் இதுவிஷயம்பற்றியும் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்.

# எதிரி விடுதலையானர்

## பொலிசார் சாட்சியத்தில் முரண்பாடு, காரணம்

காங்கேசன்துறை, புதன்

சங்கானைப் பொலிசாரால் மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட ஓர் வழக்கில் சங்கானைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. நூர்டின் சாட்சியமளிக்கையில் எதிரி எவ்வாறு பொலிஸ் கான்ஸ்டபிள் சில்வாவை கத்தியால் குத்த முயன்ருர் என்றும் தான் அதை எவ்வாறு சமாளித்தார்என்பதையும் விவரித்தார்.

இவ்வழக்கில் சங்கானை கிழக்கைச் சேர்ந்த வேலன் நாகன் என்பவர் ஐந்தரை அங்குல நீளமான கிறிஸ் கத்தியொன்றைச் கட்டவிரோதமாக வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தார். பொலிஸ் இன்ஸ்பெக்டர் நூர்டின் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

“இவ்வருடம் பெப்ரவரி மாதம் 23 ம் திகதி இரவு சுமார் 8-30 மணியளவில் நான் பொலிஸ் கான்ஸ்டபிள் சில்வாவுடனும் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுடனும் பொலிஸ் ஜீப்பில் ரோந்து சுற்றிச் சென்ரேம். சங்கானையில் உள்ள ‘பிளக்லேன்’ வழியாக நாங்கள் சென்றுகொண்டிருக்கையில் எதிரி எங்களுக்கு எதிர்ப் புறத்தில் ஒரு கிறிஸ் கத்தியுடன் வருவதைக் கண்டேன். எதிரியைக் கண்டதும் ஜீப்பை நிற்பாட்டும்படி சாரதிக்கு உத்தரவிட்டேன். ஜீப் நிறுத்தப்பட்டதும் நான் எதிரியை நோக்கிச் சென்றேன். பொலிஸ் கான்ஸ்டபிள் சில்வா என்னைப் பின்தொடர்ந்தார். கத்தியைக் கீழே போடும்படி நான் எதிரிக்குக் கூறியபோது எதிரி பொலிஸ் கான்ஸ்டபின் சில்வாவைக் கத்தியால் குத்த முயன்ருர். அப்பொழுது சில்வா சற்று பின் சென்று எதிரியின் தலையில் குண்டாந் தடியால் ஓர் அடி அடித்தார். நான் எதிரியின் கையில் ஓர் அடி அடித்ததும் எதிரி கிறிஸ் கத்தியைக் கீழே போட்டார். அக்கத்தியைச் சில்வா எடுத்துக் கொண்டார். எதிரி குண்டாந் தடியால் தாக்கப்பட்டதால் அவருக்கு தலையில் காயம் உண்டாகியது. எதிரியைக் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்ரேம். பின்னர் நாங்கள் அவரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தோம்.

பொலிஸ் கான்ஸ்டபிள் சில்வா சாட்சியமளித்தபின் மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி தாமோதரம் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கையில் கூறியதாவது:-

பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. நூர்டினின் சாட்சியமும் சில்வாவின் சாட்சியமும் ஒன்றிற்கொன்று முரணுக இருக்கின்றன. இச்சம்பவம் நடைபெற்ற தினத்தன்று என்ன நடந்திருக்கிறதென்பதைத் திட்டவட்டமாகத் தீர்மானிக்க முடியாமல் இருக்கிறது. இது சம்பந்தமாகச் சந்தேகம் எழுந்துள்ளதால் அச்சந்தேகத்திற்குரிய பலனை எதிரிக்குக் கொடுக்க வேண்டும். ஆதலால் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்கிறேன்.

காங்கேசன்துறைப் பொலிஸ் தலைமை இன்ஸ்பெக்டர் திரு. ஏ. பிறிட்டோ வழக்கை நடத்தினர். எதிரிதரப்பில் திரு. ஆர். ஜே செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. திஸ்சா விஜயரத்தின ஆஜரானர்.

இதே சம்பவத்தையிட்டு சங்கானைப் பொலிசாரால் வேலன் நாகனுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மற்ரேர் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அவ்வழக்கைத் தொடர்ந்து நடத்துவதுபற்றி காங்கேசன் துறைப் பொலிஸ் சுப்பிரிண்டனுடன் ஆலோசிக்க வேண்டுமெனவும் ஆதலால் இவ்வழக்கை கோர்ட்டார் வேறு ஒரு திகதிக்கு ஒத்திவைக்க வேண்டுமென திரு. ஏ, பிறிட்டோ கேட்டுக்கொள்ளவே நீதிபதி வழக்கை அடுத்த மாதம் 7 ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# வீதியமைப்புவேலையில் பட்டதாரி மாணவர்கள்

கண்டி, புதன்

பேராதனை, இலங்கைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 200 பட்டதாரி மாணவர்கள், அகலவத்தை ஹினிடுவ புதிய வீதியமைப்பு வேலையில் பங்குபற்றுவதற்காக இன்று காலை கண்டியிலிருந்து களுத்துறைக்கு புகையிரத மார்க்கமாக பயணமானர்கள்.

200 பட்டதாரி மாணவர்களுக்கும் 200 புகையிரத வாறண்டுகள் கொடுக்கப்பட்டதென்றும், இம்மாணவர்கள் கண்டியிலிருந்து களுத்துறைக்குப் புகையிரத மார்க்கமாகப் பிரயாணம் செய்து பின்னர் களுத்துறையிலிருந்து வேலை நடைபெறும் இடத்துக்கு காணி அபிவிருத்தி இலாகா வான்கள் மூலமாகச் செல்வார்கள் என்றும் தெரிகிறது.

ஏப்ரல் மாதம் 28-ம் திகதி வரை இப்பட்டதாரி மாணவர்கள் வீதியமைப்பு வேலை செய்வார்கள்.

# சாராய விற்பனை வரி

## கசிப்புமுதலாளிகளுக்கே நன்மையாம்

கொழும்பு, புதன்

சாராயத்தின்மீது விற்பனை வரி விதிப்பதால் கசிப்பு முதலாளிகள்தான் இலாபம் பெறுவார்கள் என்று கலால் கமிஷனர் திரு. டி. பி. வடுகொடப்பிட்டியா உள்நாட்டு அமைச்சருக்குத் தெரிவித்துள்ளார்.

இந்த விற்பனை வரி வருமானத்தை அதிகரிப்பதற்குப் பதில் சாராய விற்பனையில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்துமென்றும் கமிஷனர் தெரிவித்துள்ளார். விற்பனவு வரி அடுத்த நிதி வருடத்திலிருந்து அமுலுக்கு வரக் கூடும்.

# காங்கோ ஆலோசனைக்கமிட்டி

நியூயோர்க், ஏப். 24

காங்கோ விவகாரம் சம்பந்தமாக ஐ. நா. ஆலோசனைக் கமிட்டியின் அந்தரங்கக் கூட்டமொன்றை ஐ. நா. பதில் தலைமைக் காரியதரிசி யு. தாண்ட் கூட்டிகாங்கோவுக்கான ஐ. நா. பிரதிநிதி திரு. கார்டினரின் அறிக்கையை நேரில் கேட்கச் செய்தார்.

# வாரமுடிவில் எட்டுப்பேர் மரணம்

மத்துகமம், புதன்

கடந்த வாரமுடிவில் மத்துகமம் பகுதியில் எட்டுப்பேர் திடீரென மரணமானர்கள் என அறிவிக்கப்படுகிறது.

# கருவாட்டு விநியோக முறை திருப்பியமைக்கப்படும்

கொழும்பு, புதன்

கூ. மொ. வி. ஸ்தாபனம் மேற்கொண்டு நடாத்தும் கருவாட்டு விநியோக முறையை மாற்றியமைப்பதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உணவு இலாகா விலிருந்தும், கூ. மொ. வி. ஸ்தாபனத்திலுமிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில அதிகாரிகளின் உதவியுடன் இன்றைய கருவாட்டு விநியோக முறை பற்றி ஒரு ஆராய்ச்சி நடத்துமாறு உணவு இலாகாவின் நிரந்தரக் காரியதரிசி திரு. கே ஆழ்வாப்பிள்ளை கேட்டுள்ளார். கருவாட்டின் மொத்த விற்பனவு, சில்லறை விற்பனவு ஆகியவை யெல்லாம் பற்றியும் விசாரணை நடத்துமாறு இந்த அதிகாரிகள் கேட்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் தமது ஆராய்ச்சியை உடனடியாகவே ஆரம்பிப்பார்கள் எனத்தெரிகிறது.

கருவாட்டு விநியோகம்பற்றி எம். பி. க்களும் பொதுமக்களும் பலவாறு குறைகூறியதன் பேரில் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது.

# உபதேர்தல் ஏற்பாடு

கொழும்பு, புதன்

அநுராதபுரம் உப தேர்தலில் குறைந்தது நான்கு அபேட்சகர்களாவது போட்டியிடுவார்களென்று தெரிகிறது. அநுராதபுரம் உபதேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் அடுத்த மாதம் தாக்கல் செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

யு. என். பி., சுதந்திரக் கட்சி, எம். ஈ. பி. ஆகிய மூன்று கட்சிகளும் அநுராதபுரம் உபதேர்தலில் நிச்சயமாக அபேட்சகர்களை நிறுத்துவதென்று முடிவு செய்துள்ளன.

மக்கோனவைச் சேர்ந்த ஜனப். ஏ. வை. எம். மன்சூர் என்பவர் மூதூர் தொகுதி உபதேர்தலில் போட்டியிடக் கூடுமெனத் தெரிகிறது. ஜனப். மன்சூர் 1956-ம் ஆண்டுத்தேர்தலில் புத்தளம் தொகுதியில் லங்கா சமசமாஜக் கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர்.

# ஆராய்ச்சிக் கழகத்துக்கு ரூ. 10 லட்சம் தேவை

கொழும்பு, புதன்

திறமையுள்ள முறையில் இயங்குவதற்கு இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி கழகத்துக்கு ரூ. 10 லட்சம் தேவைப்படுகிறது.

இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி கழகத்தின் டைரக்டர் டாக்டர் ஏ. சுந்தரலிங்கம் இதுபற்றித் தெரிவிக்கையில், அரசாங்கம் எங்களுக்கு அவசியமாக உதவியளிக்க வேண்டுமென்றும், இதற்காக உதவி பெறும் வறியவர்களிடமிருந்து தாம் பணம் வசூலிக்க முடியாதென்றும், குறைந்தது பத்து லட்சம் ரூபாவாகுதல் அவசியம் வேண்டுமென்றும் கூறினர்.

கடந்த வருடங்களில், தனியார்துறையிடமிருந்து அறவிடப்படும் வரி அதிகரிக்கப்பட்டதென்றும், அப்படியிருந்தும் செலவுகள் அதிகரித்துக் கொண்டே போகிறதென்றும், அரசாங்கத்தின் உதவியின்றி இக்கழகம் சரிவர இயங்க முடியாதென்றும் கைத்தொழில் மந்திரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் மூன்று வருடங்களுக்கு முன்னர் இக்கழகத்துக்கு 50 லட்சம் ரூபாய் வழங்கியிருந்தது.

இக்கழகம் 1955-ம் ஆண்டு மே மாதம் நிறுவப்பட்டது.

காலி, புதன்

67 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்வதென்று காலி மாநகரசபை முடிவுசெய்துள்ளது.

### மணி வாக்கு

தோல்வி, அகம்பாவத்தினல் விளைவது. கடுமையாக உழைக்காமலே வெற்றிகாணும்அளவுக்குத் தங்களிடம் கெட்டிக்காரத்தனம் இருப்பதாக நினைத்துப் பலர் கஷ்டப்பட்டு வேலை செய்வதில்லை.

— எடிசன்

ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு சித்திரை 13 மீ உ (26-4-62)

## வவனியா

இன்று வவனியாவிலே ஆரம்பமாகும் கமத்தொழில், கைத்தொழில் பொருட்காட்சி, அம்மாவட்டத்தின் எதிர்கால வளர்ச்சிக்கும் சிறப்பாகத் தமிழ் மக்களுக்குப் புதிய ஊக்கமளிக்கவும் வழிகாட்டுமென்றே நம்புகின்றோம். இக்காட்சியை ஒட்டி வெளியாகியுள்ள மேலானதோர் சிறப்பு மலரைக் கண்டே இந்த நம்பிக்கை நமக்கு ஏற்படுகின்றது.

வவனியாவைத் தேன் சொரியும் நாடாக மாற்றிவிடக்கனவு கண்டு உழைத்தவர்களும், உழைத்து வருபவர்களுமான பல அறிஞர்களும் தங்கள் உயரிய அனுபவங்களையும் அரிய யோசனைகளையும் இச்சிறப்பு மலரில் வெளியிட்டிருக்கின்றார்கள். சிறந்த பயனுள்ள முறையில் இம்மலரை வெளியிட்டவர்களை நாம் பாராட்டுகின்றோம்.

சென்ற 30 ஆண்டுகளுக்குள்ளாக இலங்கையின் ஜனத்தொகை இரட்டிப்பாகியுள்ளது. 1961-ம் வருடத்தில் மக்கள் எண்ணிக்கை ஒரு கோடி மூன்று லட்சத்துக்கு மேல் உயர்ந்துள்ளதுடன், வருடா வருடம் சராசரி 3 லட்சம் கூடி வருவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. மக்கள் எண்ணிக்கை கூடக்கூட இங்கு வேலையில்லாக் கஷ்டங்கள் அதிகமாவதுடன் உணவு, உடைத் தேவைகளும் அதிகரிக்கின்றன. கமத்தொழில் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியான திரு. எம்.ஸ்ரீகாந்தா எழுதியுள்ள கட்டுரையில் இவ்விஷயமாக சில முக்கிய புள்ளிவிவரங்களைக் கொடுத்து, நமது அவசிய தேவைகளான உணவு, உடை இவற்றை இங்கேயே உற்பத்தி செய்ய முற்படின், வேலையில்லாக் கஷ்டங்கள் வெகுவாகத் தீருவதுடன் நாட்டின் செல்வமும் வெளியேருமல் பாதுகாக்கப்படலாமென்று விளக்கியுள்ளார்.

1960-ம் வருடத்தில் உணவுக்கும் உடைக்குமாக வெளிநாடுகளுக்கு எவ்வளவு பணம் அனுப்பியுள்ளோம் தெரியுமா? உயிருள்ள கால்நடைகளுக்காக ரூ. 25 லட்சம், இறைச்சி வகை ரூ. 34 லட்சம், பால் வகை, முட்டை, தேன் ரூ. 7 கோடி 64 லட்சம், மீன்வகைகளுக்காக ரூ. 10கோடி 54லட்சம் அரிசி உள்ளிட்டு தானிய வகை ரூ. 31 கோடி. பழம், காய்கறிகள் ரூ. 10 கோடி 17 லட்சம், சீனி வகை ரூ. 8 கோடி, கோப்பிவகை 5கோடி, கால்நடைத் தீன் ரூ. 5 லட்சம், பலவித உணவுகள் ரூ. 64 லட்சம், துணிவகைகள் ரூ. 18 கோடி 56 லட்சம். இந்த உணவு, உடை அவசிய தேவைகளை இங்கேயே நாம் உற்பத்தி செய்ய முற்பட்டால், பல லட்சம் பேர்களுக்கு வேலை கிடைப்பதுடன், நாட்டின் செல்வமும் பாதுகாக்கப்படும்.

போதிய நீர்வளமும், நிலவளமும் வன்னிநாட்டிலுண்டு. வடமாகாணத்தைச்சேர்ந்தஇப்பகுதியில் கமத்தையும் கைத்தொழில்களையும் பெருக்க என்னென்ன வசதிகளுள்ளனவென்பதை பல அனுபவஸ்தர்களும் இம்மலரில் விளக்கியுள்ளனர். வவனியா வளர்ச்சிக்கு தமிழ் மக்கள் செய்ய வேண்டிய பணி அதிகமுண்டு. அவற்றைச் செய்ய, இக்காட்சி தூண்டுவதுடன், இதன்மூலம் தமிழரின் முன்னேற்றத்துக்கும் வழி செய்யுமென்றே நம்புவோம்.

# தமிழ் மொழிக்கு உத்தியோக அந்தஸ்து வேண்டும்

## ஒற்றுமையை வளர்க்க வழி

— எஸ். சிவசுப்பிரமணியம் —

இம்மாதம் 19-ம் திகதி 'ஈழநாடு' பத்திரிகையில் "ஒற்றுமையின் அவசியம்" என்றதலைப்பில் வெளியான ஆசிரியத் தலையங்கம் காலத்துக்குப் பொருத்தமானதாகும். ஒற்றுமைக்குப் பாடுபடும் அதே சமயம் கீழ்வரும் உண்மைகளைக் கருத்தில் கொள்வதால் நன்மையுண்டாகும்.

1. ஒற்றுமைஎன்பது ஒரேமாதிரி இருப்பதல்ல வித்தியாசமுண்டு. நல்லுறவிலேயே ஒற்றுமை தங்கியுள்ளது; ஒருமைப்பாட்டிலல்ல. ஒருமைப்பாட்டை உண்டுபண்ண மேற்கொள்ளப்படும்பிரயத்தனங்கள் ஒருமைப்பாட்டைச் சீர்குலையவும் செய்யலாம். சக வாழ்வின் தர்மத்தை மக்கள் உணரும் போதே நல்லெண்ணமும், சிநேக உறவும் உண்டாகின்றன.

2. சிங்கள மக்களாயிருந்தாலென்ன தமிழர்களாக இருந்தாலென்ன, தத்தம் கருத்துக்களையோ கொள்கைகளையோ ஏனைய இனத்தவர்கள் மீது திணிக்க எத்தனிப்பது புத்தியற்ற செயலாகும். பேச்சுவார்த்தைகள் மூலமாகச் செய்வது வேறு விஷயம்.

3. பலதரப்பட்ட பிளவுகளிடையேயும் ஒற்றுமை தேடியாக வேண்டும். எல்லா விஷயங்கள் பற்றியும் எல்லா மக்களும் எப்பொழுதுமே ஒரே மாதிரியாக அபிப்பிராயங்கொள்ள முடியாது.

4. இலங்கையிலுள்ள தமிழரைப் பொறுத்தவரை, ஒரு சில அடிப்படையான முக்கிய அம்சங்கள்பற்றியேனும் இந்த நெருக்கடியான நேரத்தில் மக்களிடையே ஒற்றுமையேற்பட்டால் போதும்.

5. ஒரு சில விஷயங்களில் தமிழ் மக்களிடையே இத்தருணத்தில் அதிகம் அபிப்பிராய பேதம் இருக்கமுடியாதென்றே கூறலாம்.

முதலாவதாக, தமிழ் மொழிக்கு உத்தியோக அந்தஸ்து வழங்கப்படவேண்டும் எனத் தமிழர் அனைவரும் ஏகமனதாக விரும்புகின்றனர். இந்த விஷயத்தில் தமிழரிடையே அபிப்பிராய பேதம் இருக்க முடியாது.

இரண்டாவதாக, தமிழருடைய கலாச்சாரம், சமுதாயம், கைத்தொழில், விவசாயம், பொருளாதாரம் ஆகியவற்றின் அபிவிருத்திபற்றியும் தமிழரிடையே அபிப்பிராய பேதங்கள் அதிகமில்லை.

மூன்ருவது, அரசாங்க சேவையில் தமிழர் கொள்ளும் பங்குபற்றியும் தமிழ் இனத்தவரிடம் அபிப்பிராய பேதம் இருக்கமுடியாது.

இப்படியான அடிப்படை அம்சங்கள்பற்றித் தமிழரிடையே ஒற்றுமை இருப்பது ஐக்கிய முயற்சி எதற்கும் ஆதாரமாகவுள்ளதெனலாம். தமிழரிடையே ஒருமைப்பாட்டை உண்டுபண்ணுவதற்கு இந்த ஐக்கிய உணர்வுகள் தட்டியெழுப்பப்படவேண்டும்.

6. இப்பேற்பட்ட பொது விஷயங்களில் தமிழர் ஒன்று சேர்ந்து நடந்துகொள்ளமுடியும். தமது தனித்தன்மைகளையும் பாதுகாத்துக்கொண்டு இப்படியான முயற்சிகளை அவர்கள் ஒன்ருகக்கூடி மேற்கொள்ளவும் இயலும். தமிழர்களுக்கான தலைவர் பற்றிய விஷயம் வேறு. பொது முயற்சிகளை மேற்கொள்ள தமிழரிடையேயுள்ள வெவ்வேறு குழுவினரும் ஒன்று சேர்ந்தால் கூட்டுமுறையில் தலைவரைத் தேர்ந்தெடுக்கலாம். அல்லது, வெவ்வேறு குழுக்களிலிருந்து தலைவர்களைத் தேர்ந்தெடுத்து மாற்றிக் கொண்டே போகலாம்.

இந்தச் சமயத்தில் தலைவர் பற்றிச் சிந்திப்பது தேசபற்றற்றசெய்கையாகும். இப்போது நல்ல சேவையே தேவைப்படுகிறது.

சேவை உணர்ச்சியும் தலைமை ஆர்வமும் இணைந்து உருவாக வேண்டும். தலைமைதாங்கித் தனிப்பட்ட புகழும் பெருமையும் பெறவேண்டுமென்று தமிழரிடையே எவரும் எண்ணுவதற்கு இது தருணமல்ல. இந்த எண்ணங்களை ஒரேயடியாக ஒழித்துக்கட்டுவது முடியாது தான்.

7. மகாத்மாகாந்தியைப் பின்பற்றுபவர்கள் என்றும், சத்தியாக்கிரக ஆதரவாளர் என்றும் தம்மைக் கூறிக்கொள்ளும் தமிழரிடையே, பல கட்சியினர் இருக்கிருர்கள். தனது அபிப்பிராயங்களுக்கு முரணுகவிருந்தவர்களைப் போற்றியதால் மகாத்மாகாந்தி வெவ்வேறு மக்களையும் ஒன்று சேர்த்தார் எனக் கூறப்படுகிறது. மகாத்மாகாந்தியின் இந்தத் தருமத்தை இனிமேலாவது கடைப்பிடித்தால் தான் தமிழர் தம்மிடையே ஒற்றுமையை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

8. ஒருவரின் குறைநிறைகளைப் பேசிக்கொள்ளும் பழக்கத்தைக் கைவிட்டால் ஓரளவுக்கு ஒற்றுமையை உண்டு பண்ணலாம்.

9. தமிழரிடையேயும், தமிழருக்கும் ஏனைய இனத்தவருக்குமிடையேயும் ஒற்றுமை ஏற்படுத்துவதில், தமிழ்தேசிய விவகார இலங்கைச் சங்கத்தை நிறுவ முயல்வோர் தீவிரமாக உழைக்க முன்வந்துள்ளனர். இச்சங்கம் பாலிமெண்டரித் தேர்தல்களுக்கோ ஏனைய உள்ளூர் தேர்தல்களுக்கோ அபேட்சகர்களை அனுப்பிவைக்கும் முயற்சியில் இறங்கமாட்டாது.

10. 'ஈழநாடு' பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கங்களிலும் ஏனைய பகுதிகளிலும் தமிழர் ஒற்றுமை பற்றியும், தமிழருக்கும் ஏனைய இனத்தவருக்குமிடையே ஏற்படவேண்டிய ஒற்றுமை பற்றியும் அடிக்கடி வலியுறுத்துவது மகிழ்ச்சிக்குரிய அம்சமாகும். ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு 'ஈழநாடு' பத்திரிகை தான் மேற்கொண்டுள்ள முயற்சியை இனிமேலும் தளராது செய்ய வேண்டும். ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளையும் திட்டவட்டமாக மக்களுக்கு எடுத்துக் கூறினல், அது பெரும் உதவியாகவிருக்கும்.

தமிழ் மக்களுக்கு இன்று ஒரு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுள்ளது. தமிழினத்துக்கும் நாட்டுக்கும் நன்மை பயக்கும் வழிவகைகள் பற்றிப் பொதுமக்கள் கொள்ளும் அபிப்பிராயங்களையும், அவர்களது ஆலோசனைகளையும் தெரிந்துகொள்ள உதவுவது மிகவும் நன்று.

11. அவசரகாலச் சட்ட நியதிகள் சிலவற்றை அரசாங்கம் வாபஸ் செய்துள்ளது. எந்த நாட்டிலேனும் அவசரகாலநிலைமையொன்றின்போது அந்த நாட்டு மக்களிடையே ஒற்றுமை ஏற்படுவது இயல்பு. இன்று இலங்கையிலும் இதே நிலைமைதான் நிலவுகிறது. ஒரேமாதிரி இல்லாவிட்டாலும் நல்லுறவின் அடிப்படையிலும் சகவாழ்வின் அடிப்படையிலும் சகல மக்களும் ஒற்றுமையாக வாழவேண்டியது அவசியமாகும்.

## உத்தியோக விண்ணப்பங்களுக்கு

### பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் தேவையில்லை!

கொழும்பு, புதன்

அரசாங்க சேவை நியமனங்களுக்காக நடத்தப்படும் தேர்வுப் பரீட்சைகளுக்குத் தோற்றுபவர்கள், பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போதே தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களையும் சமர்ப்பிக்க வேண்டியதில்லை.

இந்தப் பரீட்சைகளுக்குத் தோற்றும்போது பிறப்பு அத்தாட்சி எதுவும் தேவையில்லையென்றும் நியமனம் பெற்றுக் கொள்ளும்போதுதான் வயது அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும் எனவும் திறைச்சேரி கூறியுள்ளது.

அரசாங்க சேவைப் பதவிகளுக்குப் புதிதாக ஆட்களைச் சேர்த்துக்கொள்ளும்போது கையாளப்படும் முறைகள்பற்றித் திறைசேரிக் காரியதரிசி கண்டனம் தெரிவித்துள்ளார். இதுபற்றிச் சகல இலாகாத் தலைவர்கள்மீதும் அவர் குறை கூறியுள்ளார்.

உத்தியோக விண்ணப்ப விளம்பரங்கள் செய்யும்போது பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களையும் விண்ணப்பங்களுடன் அனுப்பி வைக்கும்படி இலாகாக்கள் கேட்டுக்கொள்வதைத் திறைசேரி கண்டித்துள்ளது. சில சமயங்களில் வெகு குறுகியகால அறிவித்தலுடனேயே விண்ணப்பதாரிகள் பிறப்புச் சாட்சிப் பத்திரங்களை அனுப்பி வைக்க வேண்டி நேரிடுகிறது. இது விண்ணப்பம் செய்பவர்களுக்கும், பிறப்புப் பதிவுக் காரியாலயங்களுக்கும் பெரும் கஷ்டங்களை ஏற்படுத்தியுள்ளது.

### ஐயாறன் எழுதுவது

பாரிஸ் நகரிலிருந்து ஒரு தமிழ் நண்பர் நீண்டதோர் கடிதம் எழுதியுள்ளார். "எங்கள் வீடு ஸீன் நதியின் கரையிலுள்ளது. அந்த ஆறு பாரிஸ் பட்டணத்தின் மத்தியிலே பாம்புபோல் வளைந்துவளைந்து செல்லுகிறது. எங்கு போனலும் அதைப்பார்க்கலாம். அகலம் 100 முதல் 400 அடி வரையுள்ள அந்நதிக்கு, நகரில் மட்டும் 36 பாலங்களுண்டு. சிறிய கப்பல்களும், படகுகளும் இராப்பகலாக ஓடிக்கொண்டிருக்கின்றன. வீட்டிலுள்ள கண்ணடி ஜன்னல் வழியே இக்கப்பல்களைப் பார்த்துக் கொண்டிருப்பதே என் துணைவியின் ஆனந்தமான பொழுதுபோக்கு!" என்கிருர்.

ஆனல் அங்கு வீட்டுவேலைகளைச்செய்ய வேலைக்காரர் கிடையாதாம். வேலையாளுக்கு என்ன சம்பளம் தெரியுமா? ஒரு மணி நேர வேலைக்கு 5 புதிய பிராங். அதாவது சுமார் 5 ரூபாய்! இதுதான் குறைந்த அளவு சம்பளமாம்! எட்டு மணி நேர வேலைக்கு ரூ. 40! இதே கணக்கின்படி ஒரு வேலைக்காரருக்கு மாதச்சம்பளம் ரூ. 1200 ஆகும்! எவ்வளவு பேர் வேலைக்காரர்களை இவ்வளவு சம்பளம்கொடுத்து வைத்துக்கொள்ளமுடியும்? மனைவியே கடைக்குச்சென்று சாமான் வாங்கவேண்டும். வீட்டு வேலையெல்லாம் செய்ய வேண்டும். குழந்தையைப்பள்ளிக்குக்கொண்டுவிட்டு, இடைவேளைக்கு அழைத்துவந்து, பிற்பகல் கொண்டுவிட்டு மாலையில் அழைத்து வருகிருராம். மனைவி இதனல் தினசரி அதிகம் நடக்கவேண்டியிருப்பதாயும் அதுவும் உடலுக்கு உறுதிதானே என்று ஆறுதல்கொள்கிருர் நண்பர்.

* * *

வீட்டிலிருந்து அவரது காரியாலயம் 5 மைல் தூரமாம். காலை 8-30க்குப் புறப்பட்டு இரவு 7-30 அல்லது 8 க்குத் தான், சிலசமயம் 10-30க்குத் தான் வீடு திரும்புவாராம். வீட்டிலிருந்துகொண்டு செல்லும் உணவு ஆறி அட்சதையாகிவிடும் அதைத்தான் காரியாலயத்தில் வைத்துச் சாப்பிடவேண்டும். பாதாள ரயிலுக்கு 'மெட்ரோ' என்று பெயர். அதில்தான் தினசரி ஆபீஸ் செல்வதென்றும் அரைமணி நேரத்தில் ஆபீஸ் சேர்ந்துவிடலாமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

பாரிஸ் என்ருல் இந்திரலோகமென்று நினைக்கிறேம். பொருமைகூடப்படுகிறேம்பணக்காரருக்கு அப்படி இருக்கலாம். ஆனல் நண்பர் எழுதியுள்ளதைப் பார்க்கையில், இங்கே இருப்பதே எவ்வளவோ சுகம்போல் தோன்றுகிறது. கருடா சுகமா? என்று கேட்டதற்கு 'இருக்கிற இடத்தில் இருந்தால் சுகம்' என்ற கதை நினைப்புவருகிறது.

* * *

கொழும்பிலே சில சினிமாச் சாலைகள் மிக அசுத்தமாக இருப்பதைக் கண்டு தாம் திடுக்கிட்டுப் போனதாக மாநகரசபை மெம்பர் ஒருவர் கூறுகிருர். சினிமாச் சாலைகளின் நிலைமையை விசாரிக்க அவரை ஒரு கமிஷனராக நகரசபை நியமித்தது. சென்ற சனிக்கிழமையன்று அவர் சில சினிமாச்சாலைகளைப் பார்த்துவிட்டு, தொத்து வியாதிகள் பரவும் மூலஸ்தானமாக பல சினிமாச்சாலைகள் இருப்பதாகக் கூறுகின்ருர். அவர் வெளியிடும் அறிக்கையையும், கூறும் யோசனைகளையும் கொழும்பு நகரசபை பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்குமென்று ஒரு செய்தியைப் படித்தேன்.

இங்கு யாழ்ப்பாணத்திலும் சில சினிமாசாலைகளின் நிலைமை அதைவிட மோசமென்கிருர் ஒரு நண்பர். ஒரு சினிமாகொட்டகையில், ஒட்ட

(5ம் பக்கம் பார்க்க)

# நாவாந்துறை கொலை வழக்கில் எதிரி விடுதலை

## அட்டர்ணி ஜெனரல் உத்தரவு

யாழ்ப்பாணம், புதன்
நாவாந்துறை கொலைவழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியை அட்டர்ணி ஜெனரல் நிரபராதியாகக்கண்டிருப்பதனுல் அவர் விடுதலைசெய்யப்பட்டார்.

1961-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8-ம் திகதி பெர்னுண்டோ லோரன்ஸ் என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொலைசெய்ததாக நாவாந்துறையைச் சேர்ந்த செல்லத்துரை ஆசீர்வாதம் என்பவர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் விசாரணையின்பின் சுப்ரீம்கோர்ட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டிருந்தது.

இப்பொழுது இவ்வழக்கை அட்டர்ணி ஜெனரல் தள்ளுபடிசெய்து எதிரியை நிரபராதியாகக்கண்டு தீர்ப்பளித்துள்ளார். எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

## மால்டா கலவரத்தில் 3 பேர் பலி

### 125 பேர் கைது

கல்கத்தா, ஏப். 25
மால்டாவில் நிலைமை படிப்படியாக மாமூலுக்குத் திரும்பி வருவதாக மேற்கு வங்கப் பொலிஸ் மந்திரி கே. பி. முகர்ஜி இன்று இங்கு கூறினுர். ஏப்ரல் 16ம் தேதி அங்கு நடந்த கலவரத்தையொட்டிச் சிறிது நெருக்கடி அங்கு இன்னும் நீடிக்கிறது என்றுர் அவர்.

ஏப்ரல் 16-ம் தேதி அங்கு அமுலாக்கப்பட்ட 12 மணி நேர ஊரடங்கு உத்தரவு இன்றிரவிலிருந்து படிப்படியாகத் தளர்த்தப்படும் என்று அவர் தெரிவித்தார். பாதிக்கப்பட்ட பகுதிக்கு 3 நாட்கள் விஜயம் செய்துவிட்டு, அவர் இன்று இங்கு திரும்பி வந்தார்.

கலவரம் செய்ததாக அல்லது ஊரடங்கு உத்தரவை மீறியதாக 125 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக அவர் சொன்னுர்.

கலவரத்தில் 3 பேர் உயிரிழந்ததாகவும், மகாநந்தா நதியில் மற்றெருவர் உடல் காணப்பட்டதாகவும் ஆனுல், அதில் காயம் ஏதும் தென்படவில்லை என்றும் மந்திரி தெரிவித்தார்.

பல்வேறு சமூகத்தின் பிரதிநிதிகளைத் தான் சந்தித்து, வகுப்பு சௌஜன்யத்தைக் காக்குமாறும் தான் கேட்டுக்கொண்டதாக அவர் கூறினுர்.

## "புதிய ஆஸ்பத்திரி தேவையில்லை"

### பிரதமருக்கு எம். பி. கடிதம்

மாத்தறை, புதன்
அக்குரஸ்ஸ எம். பி. டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில், தற்போது மாத்தறையிலுள்ள ஆஸ்பத்திரியைத் திருத்தும்படியும், வேறு இடத்தில் புதிய ஆஸ்பத்திரி ஒன்று நிறுவுவதென்ற யோசனையைக் கைவிடும்படியும் கேட்டுள்ளார்.

டாக்டர் விக்கிரமசிங்கா தமது கடிதத்தில் மேலும் தெரிவித்ததாவது: "புதிய ஆஸ்பத்திரியை நிறுவுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் நீர் சூழ்ந்த இடமாகும். புதிய ஆஸ்பத்திரியை அமைப்பதினுல் பல சிக்கல்களும் ஏற்பட்டுள்ளன. இப்பொழுது உள்ள ஆஸ்பத்திரியை நல்ல முறையில் அமைக்காது, புதிய ஆஸ்பத்திரியொன்றை நிறுவ வேண்டும் என்று உங்களது அதிகாரிகள் தெரிவித்தால் அந்த இடத்தைப் பார்வையிடும்படி தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்".

## ரஷ்யாவின் புதிய செயற்கைக் கிரகம்

மாஸ்கோ, ஏப். 25
'கொஸ்மோ 3' என்ற புதிய ஸ்புட்னிக்' ஒன்றை நேற்று ரஷ்யா வானவெளிக்கு அனுப்பியது.

சந்திரமண்டலப் பிரயாணத்துக்கான தகவல்களைச் சேகரிக்கும் முயற்சியில் அனுப்பப்பட்டுள்ள இச் செயற்கைக் கிரகத்தில் உயிருள்ள பிராணிகள் எவையும் அனுப்பப்படவில்லை.

# "நற்பணிகள் மூலம் நாட்டில் முன்னேற்றம் காணவேண்டும்"

## புங்குடுதீவு விழாவில் பேச்சு

புங்குடுதீவு, புதன்
"தூய சிந்தனைகளும், தூய நடப்பும், எமக்கு உயர்வு தருவன. தூய பணிகளால் நாடு முன்னேறும். எனவே நாம் ஒவ்வொருவரும் நல்லன எண்ணுவோம், நல்லன செய்வோம். நமது நற்பணிகளால் நாட்டை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருவோம்."

இவ்வாறு புங்குடுதீவு இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் புணர் நிர்மாண விழாவில் பேசிய திரு. மா. க. சோமநாதன் குறிப்பிட்டார்.

புங்குடுதீவு கிழக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கக் கட்டிடத்தில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் மேலும் பேசியதாவது:-

"எமது கிராமம் மிகப் பின் தங்கிய நிலையில் உள்ளது. இவ்வேளையில் வெறும் கூத்துக்களிலும் வீண் ஆர்ப்பாட்டங்களிலும் நம் காலத்தைச் செலவிடாது, நமது தேவைகளை உணர்ந்து பணியாற்றுவோம். படித்த வலிபர்கள் வெட்கப்படாமல் பணி புரிவதற்கு முன்வர வேண்டும், அப்போது நாடு முன்னேறும்."

விழாவிற்கு திரு இ. பரமலிங்கம் தலைமை வகித்தார். இறுதியில் கழக நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். விபரம் பின்வருமாறு:- ஆலோசகர்கள்: திருவாளர்கள். நா கார்த்திகேசு, மா. க. உலகநாதன், க. திருச்செல்வம், தலைவர்: திரு. மா. க. சோமநாதன், செயலாளர்: திரு. இ. பரமலிங்கம், பொருளாளர்: திரு. த. மாகலிங்கம், எண் பார்வையாளர்: திரு. க. மு. சி. சண்முகராசா.

## வேலியே பயிரை மேய்ந்தது!

சென்னை, ஏப் 25
ரயில்வே பாதுகாப்புப்படையைச் சேர்ந்த இருவருக்கு நகரமாஜிஸ்ரேட் இன்று ஈராண்டுக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

கடமையில் தவறி 8 துணிச் சிப்பங்களைக்களவாடி விற்ற கோவிந்தராசுலு, தேநாவதன் என்ற இருவருக்கும் தண்டனை விதிக்கப்பட்டது.

சென்ற டிசம்பர் மாதம் 10-அம் தேதியன்று சென்னை மத்திய ரயில் நிலையத்தின் சிப்ப(பாசல்) அலுவலகத்திலிருந்து 8 துணி மூட்டைகளை மேற்கூறிய இருவரும் திருடிக்கொண்டுபோய் உள்ளூர் வணிகர் ஒருவரிடம் விற்றதாகக் கூறப்படுகியது.

இச் சிப்பங்களை வாங்கிய வணிகர் மதடானி அகர்வாலா என்பவருக்கு 18-மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

## ராஜாவுக்கு வரவேற்பு

ராஜபாளையம், ஏப் 25
காங்கோவில் ஐ. நா. படைத் தலைவராகப் பணியாற்றிய தளபதி கே. ஏ. ராஜா வெற்றியுடனும் புகழுடனும் இந்தியா திரும்பியதைப் பாராட்டும் முகமாக அவரது சொந்த ஊரான ராஜபாளையம் மக்கள் மேமாதம் 1-ம் திகதியன்று மாபெரும் வரவேற்பொன்றை அளிக்க முடிவு செய்துள்ளனர்.

தளபதி ராஜாவுக்கு வரவேற்பு அளிப்பது பற்றி திரு. என். ஏ. டி. அழகிய ராஜா தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. தளபதி ராஜாவை ஊர்வலமாக அழைத்துச் செல்வதென்றும், பொதுக் கூட்டத்தில் வரவேற்புரைகள் வளங்குவதென்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

## படகு கவிழ்ந்து 9 பெண்கள் மரணம்

ஹைதராபாத், ஏப் 25
அடிலாபாத் ஜில்லாதின் தோமிடிஹூட்டி கிராமம் அருகில், பென்கங்கா நதியைக் கடக்கும் போது படகு கவிந்து 9 பேண்கள் இறந்தனர்.

படகில் 17 பேர் சென்று கொண்டிருந்ததாகவும், புயல் வீசியதால் படகு கவிழ்ந்து அனைவரும் நதியில் எறியப்பட்டதாகவும், ஆண்கள் அனைவரும் 2 பெண்கள் நீந்திக் கரை சேர்ந்ததாகவும் மற்ற 9பெண்கள் மூழ்கி இறந்ததாகவும் தெரிகிறது.

## "உலக அமைதிக்குப் பாடுபட வேண்டும்"

### போப்பாண்டவர் வேண்டுகோள்

வத்திக்கன்நகரம், ஏப். 25
"உலக அமைதி ஏற்பட ஆவன செய்யவேண்டும்" என்று போப்பாண்டவர் ஜான் உலக நாடுகளை வேண்டிக்கொண்டார்.

"உலக நாடுகள் அனைத்தும் அச்சமடைய வேண்டிய நிலை இப்போது தோன்றியுள்ளது. பெரியநாடாக இருந்தாலும் சிறிய நாடாக இருந்தாலும் இப்போதுஉள்ள நிலையில் அஞ்சாமல் இருக்க முடியாது.

சுமார் ஒரு இலட்சம் யாத்ரிகர்கள் இந்தக் கூட்டத்தில் செயின்ட் பீட்டர்சு கோயிலிலிருந்து அவர் பேசிய பேச்சு தொலை காட்சியில் ஒலிபரப்பப்பட்டது.

அவர் மேலும் கூறியதாவது:-

"உலகில் இப்போது ஏற்பட்டுள்ள விஞ்ஞான தொழில் முன்னேற்றம் பாராட்டத்தக்கதாகும். ஆயினும் அதுவே அழிவிற்கும் காரணமாக இருப்பது கவலையளிப்பதாகும்.

இந்த அச்சத்தை அகற்ற அனைத்து நாடுகளும் அமைதிக்குப் பாடுபட வேண்டும். அமைதிஉள்ள இடத்தில் அமைதியைக்காக்கவும் அமைதி இல்லாத இடத்தில் அமைதியை ஏற்படுத்தவும் முயற்சி செய்யவேண்டும்".

## பெட்ரோல் நிரப்பும் நிலையங்கள்

### கார்ப்பரேஷன் பொறுப்பேற்கும்

கொழும்பு, புதன்
நூறு பெட்ரோல் விநியோக நிரப்பும் நிலையங்களை இவ் வாரம் இலங்கை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் பொறுப்பேற்கவிருக்கிறது.

தனிப்பட்ட அரசாங்கத்துக்குச் சொந்தமான துறைமுகத்திலுள்ள எண்ணெ பம்புகள், பனுகொடையிலுள்ள இராணுவ பெட்ரோல் நிரப்பும் நிலையம், புகையிரத வேலைப் பகுதியிலுள்ள பெட்ரோல் நிரப்பும் நிலையங்கள் ஆகியவைகளும் கார்ப்பரேஷன் பொறுப்பேற்கும் நிலையங்களுள் அடங்கும்.

## உருளைக் கிழங்கு பயிர்செய்கைக்கு விசேஷ உதவி

கொழும்பு, புதன்
உப உணவுப் பயிர்களை உள்ளூரில் உற்பத்தி செய்யும் திட்டத்தின் கீழ், உருளைக் கிழங்குப் பயிர்ச் செய்கைக்கு அரசாங்கம் முதலிடம் கொடுக்கவிருப்பதாகத் தெரிகிறது.

இப்பேற்பட்ட உணவுப் பொருள்களின் இறக்குமதியைக் குறைக்குமுகமாகக் காணி விவசாய இலாகாவே இந்த முயற்சியை மேற்கொள்கிறது.

தனிப்பட்டவர்களும், அரசாங்கமுமாக உப உணவுப் பொருள்களை இன்று பெருந்தொகையில் இறக்குமதி செய்கிறுர்கள். பெரும்பாலும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தும் இந்தியாவிலுமிருந்தே இந்தப் பொருள்கள் இறக்குமதியாகின்றன.

உருளைக்கிழங்கைப் பெரும்பாலான விவசாயிகள் பயிரிட முன்வருவதில்லை. இது காரணமாகவே உணவு இலாகா உருளைக்கிழங்குப் பயிரிடுகைக்கு முக்கியத்துவம் கொடுக்க உத்தேசித்துள்ளது.

இலாகாவின் இந்தத் திட்டத்தின் பெயரில், ஹோட்டன் பிளேஸிலுள்ள சுமார் 60 ஏக்கர்களில் புதிதாக இப் பயிரிடுகை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர், இந்தப் பகுதியில் 650 ஏக்கர்களில் உருளைக்கிழங்கு பயிடப்பட்டுவந்தது.

# ஐந்து எறிகுண்டுகளுடன் எதிரியைக் கைதுசெய்தோம்

## பொலிஸ் கான்ஸ்டபிள் சாட்சியம்

யாழ்ப்பாணம், வியாழன்
சட்டவிரோதமாக எறிகுண்டு வைத்திருந்ததாக நல்லூரைச் சேர்ந்த தம்பையா கதிரவேலு என்பவர்மீது குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எறிகுண்டு வைத்திருந்ததாகவும் சந்தேகத்தின் பேரில் ஐவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டதும் தெரிந்ததே.

முடிக்குரியதரப்பில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. மார்சோ வழக்கை நடத்தினுர். எதிரி சார்பில் திரு. எம். பாலசுந்தரம் திரு. வி. நடராசாவின் அனுசரணையுடன் ஆஜரானுர்.

பொலிஸ் கான்ஸ்டபிள் திஜநாயக்கா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

யாழ்ப்பாணம் புகையிரதநிலையத்தில் நானும் பொலிஸ் கான்ஸ்டபிள் சந்திரபாலாவும் நின்றபோது எதிரியை ஒருவர் எங்களுக்கு அடையாளங் காண்பித்தார். அவர் புகையிரத நிலையத்தில் மேலுள்ள பாலத்தால் வந்துகொண்டிருந்தார். மாலை 5-45 மணிக்கு அவர் அதன்வழியே இறங்கிக் கீழே வந்து கொண்டிருக்கும்போது கீழேவைத்து நாம் இருவரும் அவரைப் பரிசோதித்தோம். அவரது கையில் ஓர் பை இருக்கக் காணப்பட்டது. அதற்குள் ஓர் கடதாசிப் பெட்டிக்குள் 5 எறிகுண்டுகள் இருப்பதைக் கண்டோம். அவரிடம் அதை யெடுத்துச் செல்வதற்கான பேர்மிட் எதுவும் இருக்கவில்லை. அப்பொழுது அவசரகாலம் பூரண அமுலில் இருந்தது.

இந் நிலையில் மேல் விசாரணை ஜூன் மாதம் 27-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## ஆர்ஜன்டைனுவில் பொது வேலைநிறுத்தம்?

### தேர்தல் முடிவுகள் செல்லாதாம்!

புவனஸ்அயர்ஸ், ஏப். 25
ஆர்ஜன்டைனுவில் சமீபத்தில் நடைபெற்ற தேர்தல் சிலவற்றை ஆர்ஜன்டைனுவின் புதிய ஜனுதிபதி நேற்று செல்லுபடியாகாதென ரத்துச் செய்துவிட்டார். நாடுகடத்தப்பட்ட முன்னைநாள் ஆர்ஜன்டைனு அதிபர் பெரோனின் ஆதரவாளர்கள் சமீபத்தில் நடைபெற்ற தேர்தலில் பெரும்பான்மைப் பலம்பெற்றனர். தேர்தல் செல்லுபடியாகாதென்ற ஜனுதிபதியின் உத்தரவை ஆட்சேபித்து பொது வேலைநிறுத்தம் ஆரம்பிக்கத் தயாராக இருக்குமாறு தொழிற்சங்க சம்மேளனத் தலைவர்கள் தங்கள் தொழிற் சங்கங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

## அணு ஆயுத சோதனை வேண்டாம்

### யுதாண்ட் மீண்டும் கோரிக்கை

நியுயோர்க், ஏப். 25
அணு ஆயுத சோதனைகளை ஆரம்பிக்கவேண்டாம் என்று ஐ. நா. பதில் தலைமைக் காரியதரிசி யுதாண்ட் அணு ஆயுத வல்லரசுகளை நேற்று மீண்டும் வேண்டிக்கொண்டார்.

அணு ஆயுத சோதனைகளை நடத்தக்கூடாதென்று ஐ. நா. மகாசபை சமீபத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை யுதாண்ட் சுட்டிக்காட்டினுர்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டைகள் தோறணம் போல் தொங்குகின்றனவாம்! மூட்டைப் பூச்சி, புழுக்கம், நாற்றம், புகை இவற்றையெல்லாம் வர்ணித்தார் அவர். யாழ் நகரசபை இதைப் பற்றி எப்போது கவனிக்கப்போகிறதோ?

* * *

கங்கையாடிலென் காவிரியாடிலென்
கொங்கு தண்குமரித்துறையாடிலென்
ஒங்குமாகடலோத நீராடிலென்
எங்கு மீசன் எனுதவர்க்கில்லையே.

—திருநாவுக்கரசர்.

## உலக மக்கள் தொகை

### நிமிடத்துக்கு100 பேர்வீதம் கூடுதலாகிறது

சென்னை, ஏப் 25
உலக மக்கள் தொகை நிமிடத்துக்கு 100 பேர் வீதம் பெருகி வருகிறது என்றும் மக்கள் தொகை அதிகரிப்பு அளவுக்குமீறி ஏற்பட்டு வருகிறது என்றும் இந்திய அரசாங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்படுகிறது.

## சிறையில் ஒரு கைதி குத்தப்பட்டு மரணம்

### சாப்பாடு தரம் பற்றி கைதிகள் கைகலப்பு

அலகாபாத், ஏப். 25

நைனி மத்திய சிறையில் நடந்த கைகலப்பில் ஒரு கைதி கத்தியால் குத்தப்பட்டு மரணமடைந்தார். மற்ருெருவர் பலத்த காயமடைந்தார்.

சிறையில் சமையல்காரராகப் பணியாற்றும் கைதியொருவருடன் சமையல் நன்ருக இல்லை என்று சொல்லி சில கைதிகள் சண்டை போட்டதாகவும் சமையற்காரர் இருவரை கத்தியால் குத்தியதாகவும் சொல்லப்படுகிறது. அவர்கள் உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் ஒருவர் ஆஸ்பத்திரியில் உயிரிழந்தார்.

பொலிசார் புலன் விசாரணை செய்து கொண்டிருக்கின்றனர்.

---

## கென்னடி - மாக்மிலன் சந்திப்பு

வாஷிங்டன், ஏப். 25

பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் மாக்மிலனும் அமெரிக்க ஜனதிபதி திரு ஜோன் எப். கென்னடியும் அடுத்த சனிக்கிழமை வெள்ளைமாளிகையில் சந்திக்கும்போது உலக விவகாரங்கள் பற்றிஐந்து மணிநேரம் பேச்சுவார்த்தை நடத்துவர்.

பேர்லின் விவகாரம், அணு ஆயுத சோதனைத் தடை, படைகுறைப்பு, அமெரிக்க அணு ஆயுத சோதனை, ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேருவது ஆகியவைகள் பற்றி இருவரும் பேச்சுவார்த்தை நடத்துவர்.

திரு. மாக்மிலன் வெள்ளிக்கிழமை பிற்பகல் வாஷிங்டன் வந்து சேருவார்.

---

## பட்டினசபைக் கூட்டம்

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறை பட்டினசபையின் மாதாந்தக் கூட்டம் அண்மையில் அதன் தலைவர் திரு. பி. இம்மனுவல் தலைமையில் நடைபெற்றது.

பட்டினசபை எல்லைக்குள் ஓர் இலவச ஆயுர்வேத வைத்தியசாலையை நிறுவி நடாத்துவதற்கு நன்கொடை அளிக்க வேண்டுமென அரசினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

வருடாவருடம் பட்டினப்பகுதியில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படுவதாலும், குழாய்மூலம் நாரந்தனையிலிருந்து பெறும் தண்ணீர் குடிக்கத்தானும் போதுமாக இல்லாமையாலும் குளங்களின் கட்டுக்களைக் கட்டுதல் அவசியமாகையால் அதற்கான நன்கொடைவழங்க வேண்டுமென நீர்ப்பாசன இலாகாவைக் கேட்டுக்கொள்ளும் மற்ருேர் தீர்மானமும் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. தீர்மானங்கள் பற்றிய மகஜர் தலைவர் திரு. பி இம்மனுவேல் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

---

## புயல் காற்றினல் ரப்பர் மரங்கள் சேதம்

வத்துகாமம், புதன்

புலத்சிங்கள, கொவின்ன ஆகிய இடங்களில் கடந்த ஞாயிறு பிற்பகல் வீசிய கடும் புயல்காற்றினல், நூற்றுக்கணக்கான ரப்பர் மரங்களும் மற்ற மரங்களும் வேரோடு சாய்ந்துவிட்டன. இதன்காரணத்தால் றப்பர் தோட்டங்களில் நடைபெறும் வேலைகள் யாவும் தடைபபட்டன.

---

# ஓய்வு நேரத்தை நாட்டு தொண்டில் செலவிடுக

## கிரிலப்பனையில் இரத்தினம் பேச்சு

கிரிலப்பனை, புதன்

"பெற்ருேரும் ஓரளவு கற்ற ஊக்கமுள்ள இளைஞர்களும் மாணவர்களுக்குப் பெருந் தொண்டு செய்யமுடியும். இளைஞர்கள் ஓய்வுநேரத்தில் பயனற்ற பொழுதுபோக்குகளில் ஈடுபடுவதை விட்டு நாட்டுக்குப் பயனளிக்கும் தொண்டுகளைச் செய்யவேண்டும்."

இவ்வாறு கிரிலப்பனை செந்தமிழ் வளர்ச்சி மன்றத்தின் இலவச தமிழ் வகுப்பையும், திருக்குறள்வகுப்பையும் ஆரம்பித்துவைத்துப் பேசிய தமிழ் மறைக் கழகத் தலைவர் திரு. கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

"இலவச வகுப்புகளை நடத்தி சிறுவர்களைத் திருக்குறளில் ஊறித்திளைக்கச்செய்யவும் அவர்களுக்குக் கல்வித் துறையில் உள்ள குறைகளை நீக்கவும் செந்தமிழ் வளர்ச்சி மன்றம் முன்வந்து செயலில் இறங்கியிருக்கிறது. இது வருங்கால உலகுக்கு மக்களாக வரும் சிறுவர்களுக்கு இவர்கள் செய்யும் பெரிய பணியாகும். மற்ற இடங்களிலுள்ள இளைஞர்களும், மன்றங்களும் இவர்களைப் பின்பற்றிப் பணிபுரிய முன்வரவேண்டும்"

செந்தமிழ் வளர்ச்சி மன்றத்தின் முன்னைநாள் தலைவர் திரு. அன்ரனி பெர்ணுண்டோ வரவேற்புரை நிகழ்த்தினர். திரு. கந்தசாமி பேசியபின் மன்றத் தலைவர் திரு. டேவிற் இராசையா நன்றியுரை கூறினர்.

---

## சரவணை சனசமூகநிலையம் தீர்மானங்கள்

ஊர்காவற்றுறை, புதன்

சரவணை சனசமூகநிலையத்தின் பொதுக் கூட்டம் ஒன்று சரவணை கிராமமுன்னேற்றச் சங்க 'சிவஞான' மண்டபத்தில் நடைபெற்றது. நிலையத் தலைவர் திரு. செ. சுப்பிரமணியம் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். பின்வரும் தீர்மானங்கள் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன:-

"1961-ம் ஆண்டுக்குரிய அரசாங்க நன்கொடைப் பணம் இதுவரை கிடைக்காமல் இருப்பதையிட்டு நிலையம் வருத்தம் தெரிவிக்கிறது. நிலைய வளர்ச்சி தடைப்படுவதால் உடனடியாக நன்கொடைப் பணத்தைப் பெற்றுத்தருமாறு வெலணைக் கிராமசபைத் தலைவரை இந் நிலையம் வேண்டிக் கொள்ளுகிறது.

சரவணை—வேலணை மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் தபால் விலாசத்தை 'புளியங்கூடல்-வேலணை' என மாற்றுவதற்கு இந் நிலையம் பலத்த ஆட்சேபனை தெரிவிக்கிறது. சங்க மண்டபம் சரவணையில் இருப்பதால் இருந்த மாதிரி 'சரவணை—வேலணை' என அழைக்கப்படவேண்டும்."

இக் கூட்டத்தில் மேற்படி நிலையத்தின் இவ்வருட விளையாட்டுப்பகுதித் தலைவராக திரு. சி. கணேசலிங்கமும், காரியதரிசியாகத் திரு. இ. சிவானந்தமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

## 16 பேர் மாண்டனர்

புதுடில்லி, ஏப். 25

கிழக்கு பீகாரில் டன்பாத் என்ற இடத்தில் ரயில்வே வாகன் பஸ் ஒன்றுடன் மோதியதால் 16 பேர் கொல்லப்பட்டனர். 30 பேர் காயமடைந்தனர்.

---

## போலி 'டிக்கட்'டுடன் பரிசுபெற முயன்ருர்!

கொழும்பு, புதன்

தேசிய ஆஸ்பத்திரி ஸ்வீப்பின் 173-வது இழுப்பு முடிவில் தாம் ஒரு ஆறுதல் பரிசு பெறுவதாகக் கூறி 'ஸ்வீப்' டிக்கட் ஒன்றை ஒருவர் எடுத்துச் சென்ருர். அவர் எடுத்துச் சென்ற டிக்கட் இலக்கத்துக்குப் பரிசு விழுந்தது. ஆனல் அவர் போலி டிக்கட் ஒன்றை எடுத்துச் சென்றதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தநபர்போலிடிக்கட்டைச் சமர்ப்பித்த சிலமணி நேரங்களில் பரிசுக்குரிய என். ஏ. விமலசேன என்பவர் தமது உண்மையான 'டிக்கட்டுடன்' ஆஸ்பத்திரிஸ்வீப் சபை முன்னிலையில் தோற்றினர்.

போலி 'டிக்கட்' காண்பித்தவர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தப்பரிசு பெற்ற 'டிக்கட்' இலக்கம் 13 V 0766 ஆகும்.

---

## எல்லாம் பராசக்திமயம்!

சாவகச்சேரி, புதன்

"பிரபஞ்சம் முழுவதும் தோற்றுவதற்குக் காரணமாய் எங்கும் எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருக்கும் மகா பராசக்தியே ஸ்ரீ லலிதாம்பிகையாகும். அந்த மகாபராசக்தி அறிவு ஆனந்தமயமாய் தோற்றமும் அழிவும் இல்லாததாய் எப்பொழுதும் இருப்பதாகும். அந்தச்சக்தி இல்லாவிடின் எல்லோரும் பிணத்துக்குச் சமானமானவர்களேயாவார்கள். ஆதலால் இந்த ஸ்ரீலலிதாம்பிகையைப் பூசித்தால் எல்லாரையும் பூசித்த பலன் உண்டாகும்."

இவ்வாறு ஜெயந்திநகர்மகாதேவா ஆச்சிரமத்தில் சித்திரா பௌர்ணமித்தினத்தில் நடைபெற்ற ஸ்ரீலலிதா பூசை வைபவத்தில் "சந்திரன் சசாங்கன்" என்னும் பொருள்பற்றி ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள் உரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார்.

---

## நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகம்

### நிர்வாகிகள் தெரிவு

நீர்வேலி, புதன்

நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழக வருடாந்தப்பொதுக் கூட்டம் திரு. இ. க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது. புதுவருட உத்தியோகத்தர்கள் தேர்தலின்போது தலைவராகதிரு. இ. க. சண்முகநாதனும் காரியதரிசியாக திரு. வே. சி. அப்புத்துரையும் உபகாரியதரிசிகளாகத் திருமதி வேதவல்லி கந்தையா, திரு. சு. கனகசபாபதி ஆகியோரும் தனதிகாரியாக திரு. க. இராசதுரையும் தெரிவுசெய்யப்பட்டனர். நிர்வாகசபை உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

## ராஜன்பாபு-லீ சந்திப்பு

புதுடில்லி, ஏப்.24

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள சிங்கப்பூர் பிரதமர் லீகுவான்லீ இன்று ராஷ்டிரபதி ராஜன்பாபுவைச் சந்தித்தார். இதன்பின் பார்லிமெண்ட் கூட்ட நடவடிக்கைகளைக் கவனித்தார். பிரதமர் நேருவுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

---

## மூன்று பெண்கள் பரிதாப மரணம்

பிலியந்தலை, புதன்

மூன்று சகோதரிகள் நித்திரை செய்து கொண்டிருந்த குடிசை ஒன்று இடித்தாக்குதலுக்குள்ளாகியதால் அந்த மூவரும் மரணமானர்கள்.

பிலியந்தலை மகந்தாவில் திங்கட்கிழமை இரவு இந்தப் பரிதாப சம்பவம் நடைபெற்றது. கே. சார்லின் நோனு (வயது 14), கே. புஞ்சிநோனு (வயது 12), கே. ஜோசெபீன் (வயது 7) ஆகிய மூவருமே மரணமானவர்கள்.

இந்த மூன்று பெண்களும் கருணரத்ன பார்லிஸ் சில்வா என்னும் தோட்டத் தொழிலாளி ஒருவரின் பிள்ளைகளாவர்.

---

## கல்லூரியில் ஜோதிட பாடம்

### கேரள மகாநாட்டின் கோரிக்கை

பாலக்காடு, ஏப். 25

கேரள ஜோதிடர்கள் மகாநாடு கொல்லங்கோடு ராஜா வேணுகோபாலவர்மா தலைமையில் நடைபெற்றது.

புராதனமானதும், பயனுள்ளதுமாகிய ஜோதிட ஆராய்ச்சிக்கு கேரள சர்க்கார்போதிய ஊக்கம் அளிக்க வேண்டுமென்று தன் உரையில் ராஜா குறிப்பிட்டார்.

பட்டாம்பி சமஸ்கிருத கல்லூரியிலும், காலடியில் ஆரம்பிக்கப்படவிருக்கும் கல்லூரியிலும் ஜோதிடத்தைப் போதனை பாடமாகப் புகுத்துமாறு ராஜ்ய சர்க்காரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் மகாநாட்டில் நிறைவேறியது.

---

## நவாலி முருகானந்த சன சமூக நிலையப் புது வருட நிர்வாகிகள்

நவாலி, புதன்

சமீபத்தில் நடைபெற்ற நவாலி முருகானந்த சன சமூக வருடாந்தக் கூட்டத்தில் பின்வரும் நிர்வாக சபை நடப்பு ஆண்டிற்குத் தெரிவு செய்யப்பட்டது.

தலைவர்: திரு. வ. சண்முகம், உப தலைவர்: திரு. அ. நாகேந்திரம், செயலாளர்: திரு. அ. மகாலிங்கம், உப-செயலாளர்: திரு. செ. பரமகுரு, தனதிகாரி: திரு. வே. சிற்றம்பலம், உப- தனதிகாரி: திரு. கா. சின்னத்தம்பி.

விளையாட்டுப்பகுதிப்பொறுப்பாளர்: திரு. வை. ஜெயசிங்கம், பஜனைக் கோஷ்டிப் பொறுப்பாளர்: திரு. ஆ. முருகேசு, நாடக மன்றப் பொறுப்பாளர்: திரு. அ. கணபதிப்பிள்ளை, இலக்கிய கழகப் பொறுப்பாளர்: திரு. வை. கிருபைநாதன், தொண்டர்படைப் பொறுப்பாளர்: திரு. வே. கனகசபை, நூல் நிலையப்பொறுப்பாளர்: செல்வன். க. குணபாலன், செல்வன். மா. செல்வராசா, கணக்குப் பரிசோதகர்: திரு. இ. சிவசம்பு.

திருவாளர்கள்: செ. கந்தையா, மு. இளையதம்பி, நா. மார்க்கண்டு, வ. அப்பாச்சி, ந. நாகையா, செ. ஆறுமுகம் ஆகியோர் கமிட்டி அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

---

## நாடகத்துக்கு பரிசு

யாழ்ப்பாணம், புதன்

வசாவிழான் ஜெயசக்தி நாடக மன்றம் நாடகவிழாப் போட்டியில் நல்லூர் ஜனசக்தி நிலையத்தின் "வாழ்க்கைப்பலி" என்ற நாடகம் 2- வது பரிசு பெற்றிருக்கிறது.

---

## கைதடியில் தேங்காய் அடிப்போட்டி

கைதடி, புதன்

கைதடிகிழக்கு, இந்துவாலிபர் சங்கச் சார்பில் எதிர் வரும் சனிக்கிழமை சங்க உறுப்பினர் கட்கும், அப்பகுதி முதியோர்கட்குமிடையில் கைதடி கிழக்கு சன சமூக நிலையத்தில் தேங்காய்உடைக்கும்(போரடி) போட்டி நடைபெறும்.

---

## அட்லியின் உடல் நிலை

லண்டன், ஏப். 25

முன்னுள் பிரிட்டிஷ் பிரதமர் அட்லி பிரபுவுக்கு நேற்று சத்திரசிகிச்சை செய்யப்பட்டபின் குணமடைந்து வருகிருர். உடல் நிலை திருப்திகரமாக இருப்பதாகவும் நேற்றைய பொழுதை அவர் அமைதியாகக் கழித்தாரென்றும் தெரிகிறது.

---

## வேலணையில் சங்காபிஷேகம்

ஊர்காவற்றுறை, புதன்

வேலணைத் தீவைச் சேர்ந்த மண்கும்பான், ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தான, 12 - வது ஆண்டு 'சங்காபிஷேக -மணவாளக் கோல விழா' சென்ற செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடை பெற்றது.

பகல் சங்காபிஷேகமும், இரவு விநாயகப் பெருமான் பூந்தொட்டியில் வீதிவலம் வருதலும் நடைபெற்றன.

'கிழவியும் குளவியும்' என்னும் பொருள் பற்றி கதாப்பிரசங்கமும் நிகழ்த்தப்பட்டது.

---

## 'கலப்பு மணங்களை செல்லத்தக்கதாக்க வேண்டும்"

### கேரள சங்கம் கோரிக்கை

கோழிக்கோடு, ஏப் 25

கேரள ராஜ்யத்தின் கலப்பு மணச் சங்கத்தின் மூன்ருவது ஆண்டு மகாநாட்டின் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெற்றபோது, சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் திருமணங்களை அரசாங்கம் சட்ட பூர்வமாகச் செல்லதக்கதாக ஆக்கும்படி கேட்டுக்கொண்டது.

பலமாத கோஷ்டிகளிடை காணப்படும் வாரிசு சட்டங்களை ஒரேமாதிரியில் அமைக்க ராஜ்ய அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் சங்கம் கேட்டுக்கொண்டது.

ஆரம்ப வகுப்புகள் முதற்கொண்டே பல சமூகக் குழந்தைகளிடையே ஐக்கிய உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமெனவும், இந்த நோக்கத்துக்கு எதிரிடையாயுள்ள பாடங்களை பாட புத்தகங்களிலிருந்து எடுத்துவிட வேண்டும் என்றும் பாடங்கள் மூலமாக விஞ்ஞான ரீதியில் பரந்த நோக்கத்தைக் குழந்தைகளிடையே ஏற்படுத்த வேண்டுமென விரும்புவதாகவும், கல்விச் சீர்திருத்தம் சம்பந்தமாக கூட்டம் நிறைவேறிய ஒரு தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது

கலப்பு மணங்களில் பொலிஸார் தலையிடுவதை அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது. என்றும் மற்ருெரு தீர்மானம் கூறுகிறது.

ராஜ்யம் பூராவிலிருந்து 50 பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்

"கலப்பு மணமும், தேசிய ஒருமைப்படும்" என்பது பற்றி சங்கம் ஒரு கருத்தரங்கை நடத்தியது. திருமதி சாரதா கிருஷ்ணன் இதற்குத் தலைமை வகித்தார்.

# மக்களுக்குப் புறம்பாக இலக்கியம் இருக்கமுடியாது
## குரும்பசிட்டியில் பேச்சு

குரும்பசிட்டி, புதன்

"இலக்கியம் மக்களோடு தொடர்புடையது. சங்ககாலத்திலோ, காப்பிய காலத்திலோ தோன்றிய இலக்கியங்கள் அனைத்தும் அவ்வக்கால மக்கள் வாழ்வையும், தேவையையும் குறித்தே எழுந்தன. பல்லவகாலத்து கலைச்சிறப்புக்களும், இலக்கியங்களும் இவ்வாறே தோன்றின. சீவகசிந்தாமணியின் பின்னர் எழுந்த பெரிய புராணம், மக்கள் தேவைபற்றியே எழுந்தது. நாவலர் பெருமான் மக்கள் தேவை குறித்தே வசனநடை அமைத்தார். அதுகாறும் பெரும்பாலும் செய்யுள் வடிவில் இருந்த இலக்கியம் மக்கள் தேவை நோக்கி நாவலர் மூலம் வசனநடை ஆயிற்று. நாவலர் பெருமானின் முன் தமிழ்நாட்டின் பரவலானவசன நடை இருந்ததில்லை. ஆகையால்தான் நாவலர் "வசன நடை கைவந்த வல்லாளன்" எனப் போற்றப்படடார்"

இவ்வாறு திரு. சுப. இளங்கீரன் 'நமது இலக்கிய வழி' என்னும் தலைப்பின்கீழ் குரும்பசிட்டி உதயதாரகை சனசமூக நிலையத்தினரால் ஒழுங்குசெய்பப்பட்ட இலக்கிய உரை அரங்கில் பேசும்போது குறிப்பிட்டார்.

குரும்பசிட்டி கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் நடந்த மேற்படி உரை அரங்கில் அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:-

ஆழ்வார்கால சைவ வைஷ்ணவ பக்திப் பாசுரங்களும், நாயன்மார்களதுபக்திப்பாடல்களும், மகாகவி பாரதியாரின் பாடல்களும் அவ்வக்கால மக்கள் தேவை நோக்கி எழுந்து இன்றளவும் நின்று நிலவுகின்றன. அதேபோன்று தமிழ் எழுத்தாளர்களும் மக்களுக்காக மக்களுடன் ஒருவராய் நின்று மக்கள் வாழ்வு குறித்து இலக்கியங்களைப் படைத்தல் வேண்டும். மக்களுக்குப் புறம்பாக இலக்கியம் இருக்கமுடியாது. ஆகவேதான் நாம் மக்களுடன் இயைந்து எமது படைப்புக்களை ஆக்குதல்வேண்டும்.

கவிஞர் அம்பி 'கவிதை என்ற பொருள்பற்றி பேசுகையில் கூறியதாவது:-

"சொற்களை இலக்கண விதிகளுக்கமைய அடுக்கிச்செல்வது செய்யுளாகிவிடாது. அது மனதில் தோன்றும் உணர்ச்சிகளை மற்றவர்களும் உணர்ந்து கொள்ளுமாறு அழகிய பொருத்தமான சொற்களில் சில சந்த அமைப்புகளுக்கேற்ப வடித்துக்கொடுப்பது. உணர்ச்சிக்கேற்ப சொற்கள் தாமாகவே வந்து அமைதல்வேண்டும். வலிந்துகட்டுவது, சொற்களில் சிறைசெய்வது கவிதையாகாது."

## ஊஞ்சலிலிருந்து வீழ்ந்து மரணம்

பையகலே, செவ்வாய்

ஊஞ்சலாடிய மூவரில் ஒருவர் ஊஞ்சலிலிருந்து கீழே விழுந்து பலத்த காயங்களுடன் மரணமானார்.

கொஸ்வற்றகொட என்ற இடத்தைச் சேர்ந்த 10 வயதுள்ள ரணசிங்கா ரத்னவதி அவரது இரு நண்பர்களுடன் தோட்டத்தில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்த சமயம், எதிர்பாராதவிதமாக ஊஞ்சலிலிருந்து வீசப்பட்டு கீழே விழுந்தார். நாகொடை ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் இவர் மரணமானார்.

பையாகலையைச் சேர்ந்த பதினொரு மாணவர்கள் ஊஞ்சலாடிக் கொண்டிருந்த சமயம் மூவர் ஊஞ்சலிலிருந்து வீசப்பட்டு கீழே விழுந்தனர். பலத்த காயங்களுடன் இம்மூவரும் நாகொடை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## இ. போ. ச. மாட்டுவண்டி மோதல்

பளை, புதன்

பளையில் இருந்து நாலு மைல்களுக்கு அப்பால் உள்ள கரந்தாய்க்குளம் என்னும் இடத்தில் யாழ்ப்பாணம் கிழக்கு டிப்போவைச் சேர்ந்த இ. போ. ச. பஸ் ஒன்று மாட்டு வண்டியுடன் மோதிக்கொண்டது. மாடுகள் உயிர் இழந்தன. பஸ் வண்டியின் மேல் பக்கம் சேதம் அடைந்தது. பஸ் பிரயாணிகளும் மாட்டுவண்டிச் சாரதியும் காயமடைந்துள்ளனர்.

## புலோலி தமிழ் இளைஞர் கழகமும் வத்தனை ச. ச. நிலையமும்
### புதுவருட நிர்வாகிகள்

பருத்தித்துறை, புதன்

புலோலி தமிழ் இளைஞர் கழகத்தினதும் வத்தனை சனசமூக நிலையத்தினதும் வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. த. வயிரமுத்து தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

புதுவருட உத்தியோகத்தர் தேர்தலின் போது தலைவராக திரு. வே. சோமசுந்தரமும், உபதலைவராக திரு. சு. சந்திரசேகரமும், காரியதரிசியாக திரு. ஆ. க. ஆறுமுகமும், உபகாரியதரிசியாக திரு. த. கதிரவேலுவும், உள்ளூர் தனதிகாரியாக திரு. த. செல்லத்துரையும், வெளியூர் தனதிகாரியாக திரு. வே. ஆறுமுகமும் தெரிவு செய்யப்பட்டனர். மற்றும் 6 பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## தமிழ்மறைத் தேர்வு

கிரியப்பனை, புதன்

திருக்குறள் வகுப்பில் சிறந்த மாணவர்களைத் தெரிவு செய்து ஆண்டு தோறும் தமிழ் மறைக் கழகம் நடத்தும் அகில இலங்கைத் தமிழ் மறைத் தேர்வுக்கு அனுப்பி வைப்பதென கிரியப்பனைச் செந்தமிழ் வளர்ச்சி மன்றம் தீர்மானித்துள்ளது.

## அடெளலா மீண்டும் அழைப்பு

லியப்போல்ட்வில்லி, ஏப்ரல் 2

கடாங்கா பிரிவினையை முடிவுக்குக் கொண்வடுருவதற்கு மீண்டும் பேச்சு வார்த்தை நடத்த வருமாறு கடாங்கா அதிபர் ஷோம்பேக்கு காங்கோ பிரமர் அடெளலா அழைப்பு விடுத்துள்ளார். காங்கோவுக்கு வந்துபோவதற்கு பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஓரானிலுள்ள மாடிக் கட்டிடங்கள்
### பாதுகாப்புப் படைகள் வசப்படுத்தின

அல்ஜியர்ஸ், ஏப்ரல் 24

அல்ஜீரியாவிலுள்ள இரகசிய ராணுவ ஸ்தாபனத்தினரின் முக்கிய இடமான ஓரானிலுள்ள உயர்ந்த மாடிக் கட்டிடங்கள் சிலவற்றின் மேல்பகுதியை பிரஞ்சு பாதுகாப்புப் படையினர் இன்று தம் வசமாக்கிக்கொண்டனர். இரகசிய ராணுவ ஸ்தாபனத்தினரை எதிர்த்துத் தாக்கி முறியடிப்பதற்கே இந்த நடவடிக்கையை பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டுள்ளனர்.


# ஈழநாட்டினர் ஆசையோடு அருந்தும் மால்டெட் பால்

ஆச்சரியப்படவும் வேண்டுமா! நெஸ்டோமோல்டில் ... யிருப்பதால் அனைவரும் அருந்த ஆசைப்படுகின்றனர்! ... நீங்கள் ஒரு நெஸ்டோமோல்ட் பிரியராக விருக்க வேண்டும் ... மாக எல்லோரும் அப்படியே); அப்படியில்லாதபட்சத்தில், இதன் இனிய சுவையை பருகி அறியுங்கள்—மகிழ்ச்சியடைவீர்கள் ... தவிர மனம் வருந்தமாட்டீர்கள்! சூடாகவோ அல்லது ஐஸ்—குளுமையாகவோ அருந்தக்கூடிய நெஸ்டோமோல்ட், நாள் முழுக்க உற்சாகத்துடன் திகழச் செய்யும் வெறும் புத்துணர்ச்சியூட்டும் பானமோ அன்றியும் சுவை நிரம்பிய தாக சாந்தியோ அல்ல! டின்னை உற்றுப் பார்த்தால் உண்மை விளங்கும்—நெஸ்டோமோல்ட் உங்களுக்கு எத்துணை அளவு நன்மை புரிகின்றதென்பது புலப்படும்! இழந்த வலிமையை மீட்கவும், கட்டுமஸ்தான தேகத்தோடு மிளிரவும் உறுதுணை புரியும் ஊட்டச் சத்துக்களும், ஆரோக்கியமூட்டும் பொருட்களும் இதில் செழுமையாக அடங்கியுள்ளன. அளப்பரிய நன்மையும், சுவையும் ஒருங்கே அளிக்கின்றது என்றளவில் நெஸ்டோமோல்ட் நிகரற்று விளங்குகின்றது!




[redacted]

நான் விரும்புவது நெஸ்டோமோல்ட் அதனொக்கி நன்மையை அளிக்கிறது!

கிரிக்கெட் வீரர் போட்டி

# புதிய போட்டிகளை நடத்த அன்பர்கள் யோசனை

'ஈழநாடு' நடாத்தும் வடமாகாண கிரிக்செட் வீரர்-1962 போட்டிக்கு வெளி இடங்களிலுமுள்ள கிரிக்கெட் பிரியர்கள் கூப்பன்களை நிரப்பி அனுப்பி வருகிறார்கள்.

இப்பொழுது பலருக்கு இப்போட்டிமீது அதிக ஆர்வம் ஏற்பட்டிருப்பதுபோல் தெரிகிறது. நாளாந்தம் நமக்குக் கிடைக்கும் கூப்பன்கள் அதிகரித்துக்கொண்டுபோவதே இதற்கு அத்தாட்சி.

பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் கூப்பனின் இலக்கம் வெளியிடாததைக் கண்டு, சிலர் தடிதமூலமாகவும், சிலர் டெலிபோன் மூலமாகவும் விசாரித்தார்கள். கூப்பனில் தொடர்ந்து இல. 1, 2, 3... என்று போடுவது அவசியமில்லை என்ற காரணத்தினால் தொடர்ந்து இலக்கங்களைப் பிரசுரிப்பதை நிறுத்திவிட்டோம். அதனால் 'கிரிக்கெட் போட்டி' முடிவடையப்போகிறது என்பது அர்த்தமல்ல.

நாம் கிரிக்கெட் போட்டி ஆரம்பித்ததைக் கண்டு, பலர் மற்றப் போட்டிகளையும் ஆரம்பிக்கும்படி கேட்டுள்ளனர். மற்றப் போட்டிகளையும் காலக்கிரமத்தில் ஆரம்பிக்க முயற்சி எடுக்கப்படும்.

'கிரிக்கெட் போட்டி' குறித்து நமக்கு வந்த பல கடிதங்களில் இரண்டை இங்கு வெளியிடுகிறோம். கொழும்பிலுள்ள தேசிய கால்பந்தாட்ட கிளப் காரியதரிசி திரு. எஸ். குப்புசாமி தமது கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

"ஈழநாடு, கிரிக்கெட் போட்டியொன்றை ஆரம்பித்திருப்பது குறித்து பெருமகிழ்ச்சியடைகிறேன், இந்த ஏற்பாட்டைப்போல், உதைபந்தாட்டத்திலும் ஒரு போட்டியை ஆரம்பித்து என்னைப்போன்ற பலரது ஆசையையும் நிறைவேற்றுவீர்களாக."

## தாச்சி விளையாட்டு

சுதுமலை கிராம முன்னேற்றச் சங்கம், சன சமூக நிலையப் பொதுக் காரியதரிசி திரு. க. தம்பிராசா எழுதுவதாவது:-

"தாங்கள் கிரிக்கெட் போட்டியொன்று நடாத்துவது குறித்து மிக மகிழ்ச்சி. இப்போட்டியைப்போல், தேசிய விளையாட்டுகளில் ஒன்றான தாச்சி விளையாட்டு (கிளித்தட்டு) போட்டியொன்றை நடாத்துவதுபற்றி ஆலோசிக்குமாறு வேண்டுகின்றோம். இத்துடன் தாச்சி விளையாட்டுப் போட்டி விதிகளும், நடத்தும் முறைபற்றியும் விளக்கமாக எழுதியுள்ளோம். ஆவன செய்வீர்கள் என எதிர்பார்க்கின்றோம்."

கருத்து தெரிவித்தவர்களுக்கு எமது நன்றி. கிரிக்கெட் போட்டியைப்போல் மற்றப் போட்டிகளையும் நடாத்த முயற்சிக்கின்றோம்.

இதுவரை நமக்குக் கிடைத்த கூப்பன்களின் பிரகாரம், முதல் 6 இடங்கள் வகிப்பவர்களின் பெயர்கள் வருமாறு:-

1. கே. பாலகிருஷ்ணன், யாழ். இந்துக் கல்லூரி.
2. ஜே. கனகநாயகம், யாழ். மத்திய கல்லூரி.
3. யே. அல்பிரட், பரமேஸ்வராக் கல்லூரி.
4. என். தியாகராஜா, யாழ்ப்பாணக் கல்லூரி.
5. ஜி. பாலசிங்கம், ஹாட்லிக் கல்லூரி
6. எஸ். மகமட், யாழ். மத்திய கல்லூரி.

### வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962

'விக்னராஜா' பரிசுக் கிண்ணத்துக்காக
'ஈழநாடு' நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ..............................

கல்லூரி ..............................

எனது பெயர் ..............................

விலாசம் ..............................

இக்கூப்பனைக் கத்தரித்து 'கிரிக்கெட் வீரர் 1962', C/o. 'ஈழநாடு', தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.

# நல்ல சமுதாய அமைப்பு தேவை

## அடிக்கல்நாட்டு விழாவில் காரியாதிகாரி பேச்சு

யாழ்ப்பாணம், புதன்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயண சன சமூக நிலையத்தின் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா சனிக்கிழமை நடைபெற்றது. இவ் விழவிற்கு கொக்குவில் கிராமசபைத் தலைவர் திரு. சி. அருளம்பலம் தலைமை வகித்தார். யாழ்ப்பாணக் காரியாதிகாரி திரு. டி. பாலச்சந்திரன் அடிக்கல் நாட்டினர்.

அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:-

"எமது நாடு முன்னேற வேண்டியதற்கு தேவையானவைகள் பல உள. அதனுள் முதுகெலும்பு போன்றது சன சமூக நிலையம். இவற்றின் பயனாக பரந்தமனப் பான்மையும், விரிந்த ஒற்றுமையும் வலுப்பெற்று, மக்களிடையே நல்ல சமுதாய அமைப்புத் தோன்றும். குடிபோன்ற துர்ப்பழக்க வழக்கங்களை ஒழிக்க இதன் மத்தியில் சமூக சேவை செய்வோர் கூடுதலாக உதிக்க வேண்டும்."

# சூதாடியதாக 46 பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், வியாழன்

திருநெல்வேலி களியாட்ட விழாவொன்றில் சட்டவிரோதமாகச் சீட்டு விளையாடியதாக குற்றஞ்சாட்டி 46 பேர் மீது கொக்குவில் கிராம நீதிமன்றத்தில் யாழ்ப்பாணம் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் தலா 5 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

எதிரிகள் குற்றவாளிகலென்த்தெரிவித்திருந்தனர். பொலிசார் எதிர்த்து வழக்காடினர்.

[redacted]

### தேவை

சினிற்றேன்ஸ் லிமிட்டெட் பேசும்பட விநியோகஸ்தாபனத்திற்கு பொருளாளர், இன்ஸ்பெக்டர் பதவிகளுக்கு ஆங்கில ஜே.எஸ்.சி.க்குக்குறைவில்லாத கல்வித்தகைமையும், தட்டெழுத்துப் பயிற்சியும், முதலீடும், 3000 ரூபா ரொக்கப் பிணையுஞ் செலுத்தக்கூடியவர்கள் விண்ணப்பிக்க. முடிவு திகதி 6-5-62. முகவரி: இன்ரநாஷனம் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட், இராசா கட்டிடம், பெரியகடை, யாழ்ப்பாணம்.

### தேவை

நன்கு ஸ்தாபிக்சப்பட்ட அலுமீனியம் தொழிற்சாலையொன்றில் ஸ்பின்னர்கள், பொலிஷர்கள், அப்பிறென்டிஸ்களுக்குப் பயிற்சி பெறுபவர்களுக்கான காலி ஸ்தானங்கள் இருக்கின்றன. விருப்பமுடையவர்கள் வயதையும், அனுபவத்தையும் கூறி கீழ்வரும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்: பெட்டி எண். Y M 351 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

# விஸ்கி இங்கு தயாராகும்

கொழும்பு, புதன்

இலங்கையில் ஒரு இலங்கையரின் ஸ்தாபனம் விஸ்கி விறண்டி ஆகிய மதுபானங்களை உற்பத்திசெய்ய விருக்கிறது.

இலங்கையில் தயாரிக்கப்படவிருக்கும் இந்த இரண்டு பானங்களின் விலைகளும் இப்பொழுது இறக்குமதிசெய்யப்படுபவைகளின் விலைகளில் பாதியளவுதான் இருக்குமெனக் கூறப்படுகிறது.

இவ்வருடம் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்துக்கு உள்நாட்டு விஸ்கியும், பிரண்டியும் கிடைக்குமெனக் கூறப்படுகிறது.


## யாழ் விநோத
## கைத்தொழில் விவசாயப் பொருட்காட்சி
### —23-5--62 முதல் 24-6-62வரை—

1. சைக்கிள் பாதுகாப்பு, பீடாக்கடை ஆகியவற்றிற்கு கேள்விப்பத்திரம் போடவிரும்புவோர் அமைப்பாளருக்கு எவ்வளவு தரமுடியுமென 5-5-62 12 மணிக்கு முன் கையொப்பமிடுவோரிடம் அனுப்பவும்.

கால்நடை, கோழி, மரக்கறி, பழவகைப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் விபரங்களுக்குக் கீழ்க் கையொப்பமிட்டோரிடம் பெறவும்.

அ. யோ. காசிப்பிள்ளை,
அ. விசுவநாதன்,
இணைக்காரியதரிசிகள்.

பொதுசன நூல்நிலையம்,
24-4-62.

## 2வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)
ஸ்ரீ கிருஷ்ணா (திருக்கோணமலை) மொடர்ன் (பதுளை) லக்ஷ்மி (ரத்தினபுரி)
விஜிதா (மஸ்கெலியா) தீவொளி (நுவரெலியா) ஜெமினி (ராகல)
நியூசினிமா (குருணாகலை)

- இலட்சியங்கள் தான் மனித வாழ்வில் நிலைத்து நிற்கின்றன, என்ற அடிப்படையிலே உருவாகி...
- இன்ப வாழ்வுக்கு, இதய நிறைவுக்கு காதலே ஆதாரம் என்று ஒளி காட்டி....
- ஒன்றுபட்ட இல்லறத்திலேதான் உள்ள அமைதி பிறக்கும் என்பதை நிலை நிறுத்தி ...
- பிரிவிலே ஏற்படுகின்ற வேதனை மிகமிகப் பொல்லாதது என்று எடுத்துக் காட்டி....
- இன்பக் காட்சிகளும், இனிய பாடல்களும் இணைந்த காதல் காவியமாக, உங்கள் இதயத்தைக்கொள்ளைகொள்ள வந்திருக்கிறது...



சிவாஜி கணேசன்-சரோஜாதேவி
எம். ஆர். ராதா - சௌகார் ஜானகி
நடித்த
## பாலும் பழமும்

மனோஹரா (யாழ்ப்பாணம்)
ஜெமினி கணேசன்
வைஜயந்திமாலா நடித்த
## வஞ்சிக்கோட்டை வாலிபன்


# ஆயுள் தண்டனை பெற்ற 12 கம்யூனிஸ்டுகள் விடுதலை

சென்னை, ஏப். 25

ஸ்ரீபாலதண்டாயுதம் உள்ளிட்டு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 12 பேரை உடனடியாக விடுதலை செய்யுமாறுஅரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த 12 கம்யூனிஸ்டுகளும் ஆயுள் தண்டனை பெற்றுச் சென்னை ராஜ்யத்தில் பல்வேறு சிறைகளில் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

இவர்கள் ஏற்கெனவே ஒன்பது வருடம் சிறைத்தண்டனை அனுபவித்துவிட்டனர். தண்டனைக்காலக் குறைப்புக்களும் இவர்களுக்குக் கிடைத்திருக்கின்றன.

இவர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள சிறைத் தண்டனைகளைப் பூரணமாக அனுபவிப்பதற்குப்பதிலாக, இவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

# தடுப்புக்காவல் சட்டம்

## கானு அரசாங்கம் திருத்துகிறது

அக்ரா, ஏப். 25

கானு அரசாங்கம் தனது தடுப்புக்காவற் சட்டத்தைத் திருத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. தடுப்புக்காவலில் ஐந்துவருடங்கள் வைத்திருப்பதற்கு அனுமதியளிக்கும் இப்போதைய சட்டத்தை 20 வருடங்களுக்கு வைக்கக்கூடியதாக மாற்றும் புதிய மசோதாவுக்கு அரசாங்கம் அங்கீகாரமளித்துவிட்டது. இம் மசோதா இனி பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது